மலர்-3 இதழ்-63 ஏப்ரல் 1-15 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

## மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play



e- magazine

www.aanmeegamalar.com

# திங்கள் கிழமை வரும் அமாவாசையன்று அரசமரத்தை சுற்றி ஆசி கூறினால் பலிக்கும்

## சிவனுக்குரிய விஷேச ஸ்தலங்கள்

திருவேள்விக்குடி கௌதுகாபந்தன க்ஷேத்ரம்

திருமங்கலகுடி பஞ்சமங்கள க்ஷேத்ரம்

திருவையாறு பஞ்ச நந்தி க்ஷேத்ரம்

திருவிடைமருதூர் பஞ்சலிங்க க்ஷேத்ரம்

திருநீலக்குடி பஞ்சவில்வாரண்ய க்ஷேத்ரம்

திருவிற்கோலம் நைமிசாரண்ய க்ஷேத்ரம்

திருநெல்லிக்கா பஞ்சாட்சரபுரம்

காஞ்சி சத்தியவிரத க்ஷேத்ரம்

திருவல்லம் வில்வாரண்யம்

திருகண்டியூர் ஆதிவில்வாரண்யம்

## முக்தி தரும் ஸ்தலங்கள்

திருவாரூர் பிறக்க முக்தி

காசி இறக்க முக்தி

திருவண்ணாமலை நினைக்க முக்தி

சிதம்பரம் தரிசிக்க முக்தி

வேதாரண்யம் தீர்த்தமாட முக்தி

மதுரை கூற முக்தி

அவினாசி கேட்க முக்தி

## ராஜ கோபுரத்தை விட மூலவருக்கு உயர்ந்த விமானம் உள்ள இடங்கள்

தஞ்சை பிரகதீஸ்வரர்

தாராசுரம் ஐராவதேஸ்வரர்

திருபுவனம் கம்பேஸ்வரர்

## காலத்திற்குரிய ஸ்தலங்கள்

திருக்குற்றாலம் திருவனந்தல் பூஜை

இராமேஸ்வரம் காலை சந்தி பூஜை

திருவானைக்கா உச்சிகால பூஜை

திருவாரூர் சாயரக்ஷை பூஜை

மதுரை இராக்கால பூஜை

சிதம்பரம் அர்த்தஜாம பூஜை

## 18 தருமநூல்கள்

1.மனு, 2.அத்தி, 3.விண்டு, 4.வாசிட்டம், 5.யமம், 6.ஆபத்தமம், 7.யாஞ்ஞ வற்கியம், 8.பராசரம், 9.அங்கீரசம், 10.உசனம், 11.காத்தியாயனம், 12.சம்பவர்த்தம், 13.வியாசம், 14.பிரகற்பதி, 15.சங்க்லிதம், 16.சாதாதபம். 17.கௌதம், 18.தக்கம்.

## காசிக்கு சமமான ஸ்தலங்கள்

1. திருவெண்காடு, 2. திருவையாறு, 3. மயிலாடுதறை, 4.திருவிடைமருதூர், 5, திருச்சாய்காடு, 6, ஸ்ரீவாஞ்சியம், 7. விருத்தாசலம், 8, மதுரை, 9. திருப்புவனம்.




## பன்னிரு ஜோதிர்லிங்க ஸ்தலங்கள்

1. கேதாரம் – இமயம் (கேதாரேஸ்வரர்}
2. சோமநாதம் – குஜராத் (சௌராஷ்டிரம்,சோமநாதேஸ்வரர்}
3. மகாகாளேசம் – உஜ்ஜையினி (மகா காளேஸ்வரர்}
4. விஸ்வநாதம் – காசி (விஸ்வநாதேஸ்வரர்}
5. வைத்தியநாதம் – (மகாராஷ்டிரம், வைத்தியனாதர்}
6. பீமநாதம் – (மகாராஷ்டிரம், பீமநாதேஸ்வர்.}
7. நாகேஸ்வரம் – (மகாராஷ்டிரம், தாருகாவனம், நாகேஸ்வர்}
8. ஓங்காரேஸ்வரம் – மத்தியப்பிரதேசம் (அமலேஸ்வரம், ஓங்காரேஸ்வரர்)
9. த்ரயம்பகம் – (மகாராஷ்டிரம், கௌதம் திரயம்பகேஸ்வரர்)
10. குசுமேசம் – மகாராஷ்டிரம் (குஸ்ருணேஸ்வர்)
11. மல்லிகார்ஜுனம் – (ஆந்திரம்,ஸ்ரீசைலம் மல்லிகார்ஜுனர்)
12. இராமநாதம் – இராமேஸ்வரம்



## மூலிகை குணம் உணர்ந்தவர்கள் இந்தியர்

இந்தியாவில் சித்த மருத்துவம் சிறந்து விளங்குகிறது. இதன் ரகசியம் என்னவென்றால் மூலிகைகள் தங்களுடைய குணங்களை தகுந்தவர்களிடம் உணர்த்தியது.

அந்த தகுந்தவர்களுக்கு அவைகளுடைய மொழி புரியும். அது முழுக்க முழுக்க உணர்வுமயமானது.அந்த மொழிதான் இந்த பிரபஞ்ச மொழி. மனிதனுடைய ஆயிரக்கணக்கான மொழிகள், அவன் அறிவால் ஏற்படுத்தப்பட்டன.அதற்கும் இந்த பிரபஞ்ச மொழிக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது.

அவனுடைய மொழிகளின் ஆதாரம் அறிவு.பிரபஞ்ச மொழிக்கு ஆதாரம் உணர்வு. இந்த வித்தியாசத்தை தெளிவாக புரிந்து கொள்ளுங்கள். ஆகவே, இந்த பிரபஞ்ச உயிரினங்களை உணர்வோடு, அன்போடு, கருணையோடு நெருங்கினால், அவைகள் நட்புடன் தங்களுடைய ரகசியங்களை உங்களுக்கு உணர்த்தும். சித்த வைத்தியம் இந்தியாவில் சிறந்து விளங்க இதுவே காரணம்.

– ஓஷோ




www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com



# ஒன்றில்லாதபோது மற்றது கெடும்

ஒன்றை ஒன்று சார்ந்ததுதான் வாழ்க்கை என்பதை நம் முன்னோர் மிக அழகாக எடுத்துக் கூறியுள்ளனர். உலகமே ஒன்றை ஒன்று சார்ந்துதான் உள்ளது.

ஆனால் ஒருசில காரண காரியங்களால், நாகரீக வளர்ச்சி என்ற பெயரில் மனித இனம் ஒருசிலவற்றை தவிர்த்ததால், அதன் விளைவுகள் மிக மோசமானதாக உள்ளதை கண்கூடாக பார்க்கிறோம்.

குடும்ப சீரழிவு மட்டுமின்றி, சமுதாயச் சீரழிவு, தனிமனித சீரழிவு என்று மிகப்பெரிய தாக்கத்தை மனித சமுதாயம் சந்தித்துக் கொண்டிருப்பதற்கான காரணங்களில் ஒன்றுதான் நம் முன்னோர் சொன்ன வாக்கினை பின்பற்றாமல் விட்டது.

எவற்றால் எவை கெடும் என்று நம் முன்னோர் கூறியவற்றில் இன்றிய காலத்திற்கு ஒற்றுப் போகும் ஒருசிலவற்றை பார்ப்போம்.

01. பாராத பயிரும் கெடும்.
02. பாசத்தினால் பிள்ளை கெடும்.
03. கேளாத கடனும் கெடும்.
04. கேட்கும்போது உறவு கெடும்.
05. தேடாத செல்வம் கெடும்.
06. தெகிட்டினால் விருந்து கெடும்.
07. ஓதாத கல்வி கெடும்.
08. ஒழுக்கமில்லாத வாழ்வு கெடும்.
09. சேராத உறவும் கெடும்.
10. சிற்றின்பன் பெயரும் கெடும்.
11. நாடாத நட்பும் கெடும்.
12. நயமில்லா சொல்லும் கெடும்.
13. கண்டிக்காத பிள்ளை கெடும்.
14. கடன்பட்டால் வாழ்வு கெடும்.
15. பிரிவால் இன்பம் கெடும்.
16. பணத்தால் அமைதி கெடும்.
17. சினமிகுந்தால் அறமும் கெடும்.
18. சிந்திக்காத செயலும் கெடும்.
19. சோம்பினால் வளர்ச்சி கெடும்.
20. சுயமில்லா வேலை கெடும்.
21. மோகித்தால் முறைமை கெடும்.
22. முறையற்ற உறவும் கெடும்.
23. அச்சத்தால் வீரம் கெடும்.
24. அறியாமையால் முடிவு கெடும்.
25. உழுவாத நிலமும் கெடும்.
26. உழைக்காத உடலும் கெடும்.
27. இறைக்காத கிணறும் கெடும்.
28. இயற்கையழிக்கும் நாடும் கெடும்.
29. இல்லாலில்லா வம்சம் கெடும்.
30. இரக்கமில்லா மனிதம் கெடும்.
31. தோகையினால் துறவு கெடும்.
32. துணையில்லா வாழ்வு கெடும்.
33. ஓய்வில்லா முதுமை கெடும்.
34. ஒழுக்கமில்லா பெண்டிர் கெடும்.
35. அளவில்லா ஆசை கெடும்.
36. அச்சப்படும் கோழை கெடும்.
37. இலக்கில்லா பயணம் கெடும்.
38. இச்சையினால் உள்ளம் கெடும்.
39. உண்மையில்லா காதல் கெடும்.
40. உணர்வில்லாத இனமும் கெடும்.
41. செல்வம்போனால் சிறப்பு கெடும்.
42. சொல்பிறழ்ந்தால் பெயரும் கெடும்.
43. தூண்டாத திரியும் கெடும்.
44. தூற்றிப்பேசும் உரையும் கெடும்.
45. காய்க்காத மரமும் கெடும்.
46. காடழிந்தால் மழையும் கெடும்.
47. குறிபிறழ்ந்தால் வேட்டை கெடும்.
48. குற்றம்பார்த்தால் சுற்றம் கெடும்.
49. வசிக்காத வீடும் கெடும்.
50. வறுமைவந்தால் எல்லாம் கெடும்.
51. குளிக்காத மேனி கெடும்.
52. குளிர்ந்துபோனால் உணவு கெடும்.
53. பொய்யான அழகும் கெடும்.
54. பொய்யுரைத்தால் புகழும் கெடும்.
55. துடிப்பில்லா இளமை கெடும்.
56. துவண்டிட்டால் வெற்றி கெடும்.
57. தூங்காத இரவு கெடும்.
58. தூங்கினால் பகலும் கெடும்.
59. கவனமில்லா செயலும் கெடும்.
60. கருத்தில்லா எழுத்தும் கெடும்.

கெடாமல் பாதுகாக்க வேண்டியது அவரவர் பொறுப்பு



www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com


www.aanmeegamalar.com

# சப்த விடங்க தலங்கள்

"விடங்கம்" என்றால் "உளியால் செதுக்கப்படாத" என்று பொருள் தரும்! உளியால் வடிக்கப்படாத சிவலிங்கங்கள் இருக்கும் தலங்கள் விடங்க தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன!

தமிழ்நாட்டில் ஏழு சப்த விடங்க தலங்கள் இருக்கின்றன. இந்த ஏழு தலங்களிலும் இறைவன் சுயம்பு மூர்த்தியாக இருந்து அருள் பாலிக்கிறார். இங்கு இறைவன் அருளிய தாண்டவங்கள் முக்கியத்துவம் பெற்றவையாக உள்ளன. சப்த விடங்க தலங்களையும், அதில் அருளும் தெய்வங்களையும், நடனங்களையும் பற்றி அறிந்து கொள்வோம்.

திருவாரூர் வீதி விடங்கர் அசபா நடனம்
திருநள்ளாறு நகர விடங்கர் உத்மத்த நடனம்
திருநாகைக்காரோகணம் சுந்தர விடங்கர் வீசி நடனம்
திருக்காறாயில் ஆதி விடங்கர் குக்குட நடனம்
திருக்குவளை அவனி விடங்கர் பிருங்க நடனம்
திருவாய்மூர் நீல விடங்கர் கமல நடனம்
திருமறைக்காடு புவன விடங்கர் அம்சபாத நடனம்

- சென்னை சவுகார்பேட்டையிலுள்ள ஏகாம்பரேஸ்வரர் கோயிலில் உள்ள ‘சகோதர விநாயகரை’ வணங்கினால் பிரிந்திருக்கும் சகோதரர்கள் ஒன்று கூடுவார்கள்.
- திருவலஞ்சுழி வெள்ளை விநாயகர் போல திருத்துறைப்பூண்டி அருகில் இடும்பாவனம் சற்குணநாதர் கோயிலிலும் கடற்நுறையாலான வெள்ளை விநாயகர் அருள்கிறார். இவருக்கு பால், பன்னீர் அபிஷேகங்கள் செய்து வேண்டிக்கொள்ள குடும்பத்தில் ஐஸ்வர்யம் நிலைக்கும்.
- கும்பகோணம் அருகிலுள்ள கொட்டையூர் கோடி விநாயகரை வழிபட்டு பின் மற்ற தெய்வங்களை வழிபட்டால் கோடி செல்வங்கள் பெறலாம் என்பது ஐதீகம்.
- ஆறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமி மலை கோயிலின் கொடிமரம் அருகே தெற்கு நோக்கி அமைந்துள்ள ‘கண் கொடுத்த விநாயகரை’ அங்குள்ள புஷ்கரணியில் 48 நாட்கள் நீராடி வணங்கிவர கண்பார்வை கோளாறு குணமாகுமாம்.






புதிய பொலிவுடன்
Aanmeegamalar
(mobile app)
ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!



வழிபாட்டுத் தலங்களைப் பற்றி குறிப்புகள்
YouTube
அற்புத வண்ணமயமான ஆன்றோர் தத்துவங்கள்
பலன், பரிகாரம், ஜோதிடப் பலன்கள்
போன்ற புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளது
GET IT ON Google Play
பயன்படுத்தி
புதிய mobile app டவுன்லோடு செய்து மேற்கண்ட பகுதிகளை படித்து பயன் பெறுங்கள்
ஆன்மிகமலர் .காம்

# புராமரிப்பில்லாமல் சிதிலமடையும் கார்கோடகன் வழிபட்ட தலம்

கும்பகோணம் என்றாலே கோயில்களின் நகரம் என்றே அழைக்கலாம். அந்த அளவிற்கு கோவில்களால் சூழப்பட்ட நகரம். இதில் பல திருக்கோயில்கள் சிதலமடையும் நிலையில் இருப்பது வேதனைதான்.

இந்த சிதிலத்தில் பல புகழ்பெற்ற தலங்களும் தப்பவில்லை, அந்த வகையில், கார்கோடகன் வழிபட்டதலமும், நாக தோஷத்தை தீர்க்கும் ஒரு திருக்கோவிலும் தற்போது சிதிலமாகிவருகிறது, அதைப்பற்றி பார்ப்போம்.

கும்பகோணம் மன்னார்குடி சாலையில் உள்ள நீடாமங்கலத்தில் இருந்து கொரடாச்சேரி செல்லும் சாலையில் சென்று பிரிகிறது இந்த அரையூர் எனப்படும் அரவூர்.

பசுமை போர்த்திய சின்னசிறு கிராமம், ஓர் அழகிய சிவாலயம், கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கார்கோடகன் எனும் அரவம் வழிபட்டதால் அரவூர் என வழங்கப்பட்டது. தற்போது அரையூர் என அழைக்கின்றனர்.

பல ஆண்டு காலமாக குடமுழுக்கு காணாமல் சிதிலமடைந்து வருகிறது.

கிழக்கு நோக்கிய சிவாலயம், கோயிலின் எதிரில் ஓர் நீள் சதுர வடிவ குளம் உள்ளது கிழக்கில் ஓர் வாசல் உள்ளதெனினும் தெற்கு வாசலே பிரதானமாக உள்ளது. கருவறை பிரஸ்தரம் வரை கருங்கல் கொண்டும் விமான பாகம் செங்கல் கொண்டும் சுதை கொண்டும் அழகூட்டப்பட்டுள்ளன. தென்மேற்கில் விநாயகர், முருகன் ஆகியோர் தனி சிற்றாலயம் கொண்டுள்ளனர். நந்திக்கு சிறு கோபுரத்துடன் கூடிய மண்டபமும் உள்ளது.

இறைவன் இறைவி இருவரது கருவறையையும் ஓர் கருங்கல் தூண்கள் கொண்டும் செங்கல் சுவர் கொண்டும் கட்டப்பட்ட மண்டபம்? அதன் கூரை? விதானம் முழுவதும் இடிந்துவிட தகர தகடுகள் கொண்டு மூடியுள்ளனர்.

கோயில் சிறியதென்றாலும் அதன் சிறப்புகள் மிகப்பெரியது. ஆம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என மூன்று சிறப்புக்கள் கொண்டது இக்கோயில்.

அஸ்தினாபுரத்தினை ஆண்ட யுதிஷ்டிரனுக்கு பின் ஆண்ட பரீக்ஷத் மகாராஜாவிற்கு பாம்பினால் அழிவு ஏற்ப்பட்டது. அதனால் அவரது மகன் ஜனமேஜெயன் பின்னர் கால சர்ப்ப யாகம் செய்து உலகில் உள்ள எல்லா பாம்புகளும் அதில் வீழ்ந்து இறக்கும் படி









www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com



செய்தான். அதில் தப்பிக்க கார்கோடகன் இந்த தலத்தில் தீர்த்தம் ஏற்படுத்தி தவம் செய்து இனி எவரையும் தீண்டமாட்டேன் என இறைவனிடம் வாக்கு கொடுத்த தலம் இது. அது முதல் இந்த ஊரில் எவரும் அரவம் தீண்டி இறந்ததில்லை.

அது மட்டுமா இறைவனே இனி இத்தலம் வந்து எனை வழிபடுவோர்க்கு நாக தோஷம், ராகு கேது தோஷமும் ஏற்படாது காப்பேன் என்கிறார். பாம்பை அடித்து கொன்றவர்கள் ஒருமுறையேனும் இத்தல இறைவனை வணங்கி செயலுக்கு வருந்தினால் அவரது சந்ததியினரை இத்தோஷம் தொடராது.

சுந்தர மூர்த்தி சுவாமிகள் இத்தலம் வந்து சோடச உபசார பூசை செய்து நற்பலன்கள் பெற்றதால் இந்த சுவாமியினை ஆராதிப்போர் சகல நன்மைகளும் பெறுவர் என்பது திண்ணம்.

இவ்வூரில் இருந்த பெருமாள் ஆலயம் சிதைவுற அங்கிருந்த பெருமாள் சிலைகளும் அனுமன் சிலையும் இந்த சிவாலயத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இறைவன் கார்கோடகேஸ்வரர் கிழக்கு நோக்கியும் இறைவி மங்களாம்பிகை தெற்கு நோக்கியும் உள்ளனர். இறைவனின் நேர் எதிரில் மண்டபத்தின் வெளியே சிறிய நந்தி மண்டபம் உள்ளது. கருவறை கோட்டத்தில் விநாயகர், தென்முகன், லிங்கோத்பவர் இருபுறமும் மகாவிஷ்ணுவும், பிரம்மனும் கை கூப்பிய நிலையில் உள்ளார்கள். வடக்கில் பிரம்மனும், துர்க்கையும் தென்மேற்கில் சிற்றாலயத்தில் விநாயகர் வடமேற்கில் முருகன் வள்ளி தெய்வானையுடன் உள்ளார்.

இவ்வூரில் ஹோமகுளம் உள்ளது இந்த குளமே ஜனமே ஜெயன் ஹோமகுண்டம் ஏற்படுத்தி ஹோமம் செய்த இடம் எனப்படுகிறது. ஈசான திக்கில் எல்லை தெய்வம் பாம்புலியம்மன் கோயிலுள்ளது. மராட்டிய மன்னர்களால் முந்நூறு வருடங்களின் முன்னர் திருப்பணிகள் செய்யப் பட்டிருக்கலாம் என தெரிகிறது.

கோயில் தனியார் வசம் உள்ளது என்பதால் பல்லாண்டு காலமாக பராமரிப்பென்பதே இல்லாமல் விதை செடியாகி, செடி மரமாகி, மரம் விருட்சமாகி, கோயில் வளாகம் முழுதும் சிதிலம் சிதைவு, சீரழிவு என முன்னோரின் உழைப்பும் செல்வமும் இன்று வீணாகி நிற்கிறது.

திருப்பணி செய்ய விரும்புவோரையும் அந்த தனி நபர்கள் அனுமதிப்பதில்லை.

மரத்தை கட்டிடம் தாங்குகிறதா, கட்டிடம் மரத்தை தாங்குகிறதா நெருங்கவே அச்சப்படும் நிலையிலான கோயிலுக்கும் இறைவனுக்கும் சேவை செய்வதே தன் கடன் என்றிருக்கும் குருக்களையும் அவரிடம் நீர் வாங்கி ஏகாந்தமாய் காலம் தள்ளும் கார்கோடகேஸ்வரரரையும் நீங்கள் காண வேண்டாமா?



குருக்களின் வீடு கோயில் வாயிலிலே உள்ள பச்சை வண்ணமடித்த வீடு தான். கோயில் பாழடைந்தாலும் இறைவனை நான்கு வேளையும் விடாமல் பூசை செய்கிறார்.

– கோயில் குருக்கள்
திரு.சந்தானம் 9790473398



அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

www.aanmeegamalar.com

# பஞ்சாட்சர மந்திரம் பற்றிய அபூர்வ விளக்கம்

மனதிற்கு அடிப்படையே ஓசைதான் என்று சொல்வதுண்டு, கருவில் உள்ளே புகுந்த உயிருக்கு ஓசை தான் தொப்பிள் கொடிவழியாக மனதை உண்டாகி மனதிடம் செல்கிறது.

இன்னொரு கருத்துப்படி, உடலுக்கும் உயிருக்கும் ஓசை தான் மனதை உண்டாகிறது, பிறப்பு எடுத்த பிறகு மனம் விழித்து உணர்ச்சிகள், வாசனை, கர்மம் போன்ற நிலைகளை ஆட்பட்டு செயல்படுகிறது.

இப்படி மனதிற்கு அடித்தளமே இந்த ஓசை தான்.

மந்திரம் ஓசைகளினால் உண்டானது, ஓசை மனதின் உணர்சிகளுக்கு கட்டுப்பட்டதால் நாம் உண்டாக்கும் ஓசைகள் சில நமக்கு நன்மையையும் செய்யும் தீமையும் செய்யும்.

உதாரனமாக ஒரு நபரை பசு போல இருப்பவனே என்றால் சிரித்து கொள்வார்கள், அவரை நாயை போல இருப்பவனே என்றால் கோபாம் கொள்வார்.

இரண்டும் மிருகத்தை தான் குறிக்கிறது, எது அவருக்கு சிரிப்பை / கோபத்தை தருகிறது என்றால், அந்த மிருகத்தின் செயல் மனதில் படமாக தெரிவது தான் மனதில் உள்ள உணர்சிகளை துண்டுகிறது என்பது ஒரு பொருள்.

மற்ற ஒன்று சப்தம் நீங்கள் நாயே என்று சத்தமாக தான் சொல்லமுடியும் ஆனால் பசு என்று கத்த முடியாது இப்படி சொல்லும் பொழுது சாந்தமாக தான் ஓசை வரும் இதை அனுபவத்தில் உணரலாம்...

இது போல ஒரு நாய் குட்டிக்கு உணவு அளித்து அது உணவு உண்ணும் பொழுது அதன் பெயரை சொல்லி அழைத்தால் அந்த சப்தத்தை அதன் மனம் பதித்து கொள்ளும், பிறகு எப்பொழுது அந்த சப்தம் கேட்டாலும் (பெயர்) தனக்கு உணவு கிடைக்க போகிறது என்று அது நம்மை கவனிக்கும் இப்படி தான் ஓசைக்கு மனம் விரிவடையும் சுருங்கும்.

இங்கே கவனிக்க வேண்டியது ஓசை நம் மனதை அடைந்து நம்மில் உள்ள நரம்பு மண்டலத்தை அடைந்து நல்ல அல்லது தீய எண்ணத்தை உண்டாக்கும் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

இதை உணர்ந்த நம் சித்தர்கள், மகான்கள், யோகிகள், ஞானிகள் நமக்கு நல்ல சிந்தனை வளர மந்திரம், நாமம் என்ற சொற்களை வகுத்து தந்தார்கள்.

இப்படி தான் மந்திரம் மனதில் செயல் பாடுகளை தூண்ட வல்லது என்று முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

மந்திரத்தை பற்றி அடுத்த பார்வை.

மந்திரம் என்பது நினைப்பவனை காப்பது என்று பொருள்.

மந்திரத்தை வசமாக்கினர் பலர், மந்திரம் பலரை வசமாக்கியது பலர் மந்திரத்தை துரத்தினர் மந்திரம் பலரை துரத்தியது மந்திரத்தை அறிந்தவர் சிலர், அழிந்தவர் சிலர்.

மேலும் மந்திரத்தை பற்றி சப்த கோடி மஹா மந்திர நூலில் (வட மொழி) இருந்து சில தகவல்கள்.

1 எழுத்து உடையது பிண்டம்
2 எழுத்து உடையது கர்த்தரி
3 எழுத்து 9 உடையது பீசம்
10 எழுத்து20 உடையது மந்திரம்
20 எழுத்து மேல் உடையது மாலா மந்திரம், என்றும் சொல்ல படுகிறது.

மேலும் மந்திர தொகுப்பு என்ற நூலில் 68 வகையாக மந்திரம்களை பிரித்து உள்ளார்கள்.

இதனுடன் சைவ புஷன மந்திரம்கள்

1. சிருஷ்டி வடிவ சிவமந்திரம்கள்.
2. திதி வடிவ சதாசிவ மந்திரம்கள்
3. சங்கரவடிவ மகேஷ்வர மந்திரம்கள்
4. பிரணவ மந்திரம்கள்
5. பஞ்சாக்ர மந்திரம்கள்
6. தேவி முல மந்திரம்கள்
7. அஸ்திர மந்திரம்கள்
8. பஞ்ச பிரம மந்திரம்கள்
9. தேவாதி மந்திரம்கள்
10. மகாசக்தி மந்திரம்கள்
11. சித்த மந்திரம்கள்
12. கிரியா மந்திரம்கள்

இப்படி சித்தர்களின் மந்திர குறிப்பு நூல்கள் சொல்கிறது ...

ஓசை தான் மந்திரம், சில ஓசைகள் நன்மைகளும் சில ஓசைகள் தீமைகளும் செய்யும்.

ஒரு மீன் நீரை விட்டு வெளியே வந்ததும் எப்படி இறக்கிறதோ அப்படி தான் நாமும் காற்றால் நிரப்பப்பட்ட பந்தில் வாழ்கிறோம் காற்றை விட்டு வெளியே வந்தால் இறக்கிறோம் என்பதனை நாம் அனைவரும் அறிவோம்.

இந்த உலகம் சப்த அலைகளால் நிரம்பியது என்று புரிந்து கொள்ள வேண்டும், சப்த அலைகள் மனிதனை ஆட்கொண்டு நல் வழி படுத்த சித்தர்களும் ரிஷிகளும் மந்திரம் என்ற மொழியை இறை சிந்தனையோடு நமக்கு சொல்லி கொடுத்து உள்ளார்கள் என்று நாம் புரிந்து கொள்ளல் வேண்டும்.





ஆன்மிகமலர் மெயில் புக்

உலகில் உள்ள சமயங்களில் சைவ சமயம் இதில் முதல் தரமாக வருகிறது என்று சொல்வேன், ஆம் திருமறைகள் என்னும் அற்புதங்களை நமக்கு அறிவை தெளிவுபடுத்தி கொள்ளவும், இறைவனை தொடர்பு கொள்ள உணர்வு திருமறைகளையும் தந்து உள்ளது.

இவைகளை நாம் உணர்ந்து படிக்க ஆரம்பித்து விட்டால் மனிதன் ஈசனாக மாறிவிடுவான்.

உணராமல் படிப்பது வீண், எல்லா பக்தர்களாலும் இப்படி உணர்ந்து படிக்க முடியாது, காலமும் கோள்களும், கர்மங்களும் வழி விடாது.

இவர்களுக்காக ஆண்ட பிண்ட சராசரத்தின் அன்னை சக்தி பக்தர்கள் மேல் பரிவு பட்டு சிவ பெருமானிடம் வலது காதால் கேட்டு பெற்ற ரகசியம் தான் பஞ்சாட்சர மந்திரம் என்னும் 5 எழுத்து.

இந்த தகவலை பற்றி மாயவரத்தில் உள்ள ஒரு கோவிலில் நாம் காணமுடியும்.

இப்படி அம்பாள் சிவ பெருமானிடம் வலது காதில் மந்திரத்தை கேட்டபடி இருப்பது போல் அதாவது அம்பாள் தெற்கு பார்த்து இருப்பது போல கோவில்களை வடிவமைத்தார்கள். சில கோவில்கள் விதி விளக்காக மாறும்.

அம்பாளுக்கு பிறகு அம்பாளின் முழு அம்சத்தையும் அதாவது அகத்தியும் என்ற நிலையை அடைந்த ஒரே ஒரு நபரான அகத்தியர் பெருமான் தான் பஞ்சாட்சர மந்திரத்தை பெருமானிடம் கேட்டு அறிந்தவர்.

ஆதிசித்தர் என்றும் சித்தர்களின் குரு என்ற சிவ பெருமான் பஞ்சாட்சர மந்திரங்களையும் கோபீசம் என்னும் மகத்துவம் பொருந்திய அட்சரங்களையும் லக்கங்களையும் கடைபிடிக்க வேண்டிய முறைகளை மகிமைகளை உபதேசித்தவர்.

அவர் விதித்த நிபந்தனை காமத்தால் அடங்காத மனதை உடையவர், கோபகாரர்கள் ஏமாற்றும் சீடர்கள் போன்றவர்களுக்கு உபதேசிக்க கூடாது என்றார்.

இதை பற்றி சிவ புராணத்தில் காணலாம்

பொதிகை மலையில் இருந்து மாமுனிவர் அகத்தியர் குரு உபதேச மொழியாக மந்திரத்தை பெற்று மந்திரகாவியும் என்று எழுதி மக்களுக்கு பயன்பட வேண்டும் முயற்சி செய்தபொழுது மற்ற சித்தர்களும் ரிஷிகளும் தேவ ரகசியம் என்று அதை மறைத்து விட்டார்கள் என்று சொல்ல படுகிறது.

பிறகு அகத்தியர் இறைவனை பணிந்து உலக மக்களின் நன்மைகே எழுதியதாக விளக்கம் அளிக்க இறையனார் சாபம் போக்கினார் என்று நூல்கள் சொல்கிறது.

திருமறைகளை பாடி வந்த நாயன்மார்கள்தான் முதன் முதலில் பஞ்சாட்சர மந்திரத்தை எல்லா பக்தர்களுக்கும் தெரிவிக்கும் படி சொல்லி வந்தார்கள்.

அதில் உள்ள ரகசியம்களை அவர்கள் சொல்வது...

முதலில் அவர்கள் **ந ம சி வ ய** என்று தான் சொல்லிவந்தார்கள், இப்படி சொல்வதினால் இகலோக வாழ்க்கை மேன்மையாகும், ஆனால் மோட்சம் கிடைக்காது என்று சில காலம் கழித்து **சி வ ய ந ம** என்று மாற்றி சொல்லி இறைவனை அடைய இது தான் சரி என்று முடிவுசெய்தார்கள் அதன்படி

சி – சிவம்
வ – திருவருள்
ய – ஆன்மா
ந – திரோதமலம்
ம – ஆணவமலம்.

திரோதமலம் என்பது அழுக்கை நீக்கும் பொருள். "நான்" என்ற ஆணவ அழுக்கை பூசியிருக்கும் ஆன்மா, திரோதமலம் கொண்டு சுத்தம் செய்து, சிவத்தை அடைந்து பிறவிப்பிணியில் இருந்து விடுபடும் என்பது இதன் பொருள் என்று முடிவு செய்து இப்படி சொல்ல வேண்டும் என்று கூறினார்கள்.

இவர்கள் கோட்பாட்டின் அடிப்படையில் முதலில் கோவில்களில் நமசிவய என்றும் சில கோவில்களில் சிவயநம என்று எழுதி வைக்க பட்டது, சில பக்தர்கள் நமசிவய என்றும், சில பக்தர்கள் சிவயநம என்றும் சொல்லி வந்தார்கள்.

உண்மையில் இதன் அர்த்தம் சூட்சும பஞ் சாட்சரம், ஸ்துல பஞ்சாட்சரம் என்று பிரித்து பார்க்க வேண்டும் என்று சில மகான்கள் சொல்கிறார்கள் .

கேளப்பா சிங் நமசி வாய மென்றால்
கிளர்ந்து நின்ற தென்னமரம் வளையுமப்பா
நாளப்பா மங் மங் கென் றொருகா லோதில்
நமனுமே கிட்ட வந்து அணுகா னப்பா
வாளப்பா வங் சிவய நமவென் றாலோ
மழைதனிலே நனையாமற்
செல்லலாகும்
ஆளப்பா மழைநிற்க வேண்டு
மென்றால்
ஆச்சரியம் சிவாய ஓம் ஸ்ரீயும்
சொல்லே.

நாம் வாழும் இந்த பூமியை ஆண்ட வடிவம் என்றும் இந்த அண்டம் ஒரு வெற்று இடத்தில் சுற்றி கொண்டு இருக்கிறது என்றும் நாம் அறிவோம்.

இந்த அண்டத்துள் வாழும் நம்மை பிண்டம் என்று சொல்கிறார்கள் மெய்ஞானிகள் (சித்தர்கள்) அண் டமும் பிண்டமும் ஒன்றே என்றும் அண்டத்துக்குள் அண்டமாய் அணு வில் நிற்பவனும், அண்டவெளி பிரபஞ்சத்தில் நிறைந்து இருக்கும்.

அந்த இறைவனை அடைவது பற்றி அதாவது சிவம் என்ற அந்த மஹா பிரம்மத்தில் கலப்பது பற்றி கலந்தவர்கள், அதனுடன் கலக்க மனித பிறப்பு எடுத்த உயிர்களுக்கு கருணையுடன் சொன்ன ரகசியம் தான் இந்த பஞ்சாட்சர எழுத்துக்கள்.

சில அடிப்படை விவரங்களை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

எந்த ஒரு காரியத்தில் நாம் நுழைந்தாலும் சில விதிமுறைகள் மற்றும் கட்டுபாடுகள் உண்டு, அதன்படி நாம் செய்தோம் என்றால் நமக்கு வெற்றியும் அந்த செயலின் நிறைவு கிடைக்கும். இது ஒரு வகை அறிவியல் கோட்பாடு தான்..

ந காது
ம தோல் (தீண்டுதல் உணர்வு )
சி கண்
வ நாக்கு
ய மூக்கு

இவைகள் சித்தர்கள் வகுத்த யோகா நூல்களில் சொல்லபடுபவை.

இப்படி 5 செயல்களை உள்ளே அடக் கியது, அல்லது 5 செயல்களை கொண்ட சிவபெருமானின் அட்சரம் என்று சொல்லலாம். இப்படி 5 பூதம், 5 புலன்கள், 5 மூர்த்திகள், 5 தொழில்கள், 5 உணர்வுகள், 5 மூர்த்திகள் கொண்ட கலவை என்று புரிந்து கொள்ளல் வேண்டும்.

இந்த பஞ்சாட்சர மந்திரத்தை முறைப்படி நாம் பிரயோகிக்கும்போது சிவத்தில் கலந்து சிவமாக மாறிவிடலாம்.





ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

# அக்னி நட்சத்திரம்

அக்னி நட்சத்திர காலத்தில் எந்த விதமான சுப காரியங்களும் தொடங்க மாட்டார்கள். புதிய பேச்சுவார்த்தைகளும் துவக்க மாட்டார்கள். ஜோதிட சாஸ்திரத்தில் இது அக்னி நட்சத்திர தோஷம் என்று அழைக்கப்படுகிறது.

ஜோதிடத்தில் உள்ள அஸ்வினி முதல் ரேவதி வரை 27 நட்சத்திரங்களில் எந்த நட்சத்திரமும் அக்னி நட்சத்திரம் என்று பெயர்பெற்றிருக்கவில்லை. ஆனால் எப்படி அக்னி நட்சத்திரம் என்று வந்தது என்று கேட்கலாம்.

சித்திரை மாதம், பரணி 4ஆம் பாதத்தில் தொடங்கி ரோகிணி முதல் பாதம் வரை சூரியன் சஞ்சாரிக்கும் காலத்தை அக்னி நட்சத்திரக் காலம் என்று பஞ்சாங்கம் கூறுகிறது. அக்னி நட்சத்திரத்தை முன் ஏழு, பின் ஏழு என 2 பிரிவாக பிரித்து கூறுகிறது ஜோதிட சாஸ்திரம். சித்திரை கடைசி வாரம் தொடங்கி, வைகாசி முதல் வாரம் வரை உள்ள காலகட்டமே மிக அதிக வெப்பம் உள்ள காலமான கத்திரி வெயில் எனப்படுகிறது.

## சந்திரன் சஞ்சாரம்

பஞ்சாங்கம் என்பது இந்துமத கால அட்டவணை. வாரம், திதி, கரணம், நட்சத்திரம், யோகம் ஆகிய ஐந்து அங்கங்களே பஞ்ச அங்கம் எனப்படுகிறது. இதில் பூமியை சுற்றி வரும் சந்திரன், குறிப்பிட்ட நேரத்தில் எங்கு இருக்கிறதோ அந்த இடத்துக்குரிய நட்சத்திரம் நடப்பதாக கணிக்கப்படுகிறது.

## சூரியன் உச்சம்

ஒவ்வொரு கிரகமும் எந்த நட்சத்திரத்தில் பயணம் செய்கிறதோ, அந்த கிரகத்தின் சாரத்தில் செல்வதாக சொல்வார்கள். அக்னி நட்சத்திரம் என்று சொல்லப்படும் காலகட்டம் சூரியனின் சஞ்சாரத்தை மையமாக வைத்து கணக்கிடப்பட்டுள்ளது.

சூரியன் சித்திரை மாதம் மேஷ ராசி யில் நுழையும் போது உச்சமடைகிறார். அப் போது சூரியனின் கதிர்கள் நம்மை சுட்டு பொசுக்குகிறது. கார்த்திகை நட்சத்திரத்தின் அதிபதி சூரியன், அதிதேவதை அக்னி. ஆகவேதான் நெருப்புக்கு இணையான வெப்பத்தை கக்குவதால் அக்னி நட்சத்திரம் என்கின்றனர்.

## நெருப்பு கோள் சூரியன்

மேஷ ராசி செவ்வாயின் வீடாகும். நெருப்பு ராசியான மேஷத்தில் நெருப்புக் கோள் செவ்வாயின் ஆட்சி வீடு என்பதால் நெருப்பு கிரகமான சூரியன், மேஷத்தில் சஞ்சாரிக்கும் போது வெயில் உக்கிரமாக தகிக்கிறது.



கடும் வெப்பம் நிலவும் காலம் என்பதால், அக்னி நட்சத்திர காலம் தோஷ காலமாக கருதப் படுகிறது. அக்னி நட்சத்திரக் காலகட்டத்தில் நம் உடல்நிலை பாதிக்காமலிருக்க, காலை வேளையில் பூஜையறையில் சூரியனுக்குரிய மாக்கோலத்தை பூஜைப் பலகையில் போட்டு, சூரிய காயத்திரி மந்திரத்தை 21 முறை ஜெபிக்கலாம்.

## திருமணம் செய்யலாம்

இந்த நாட்களில் நல்ல காரியங்கள் செய்யலாமா என்ற சந்தேகம் எல்லாருக்கும் உண்டு. அக்னி நட்சத்திர நாட்களில் என்ன செய்யலாம்? எதைச் செய்யக்கூடாது என்று சாஸ்திரம் சொல்கிறது. அக்னி நட்சத்திர காலத்தில் திருமணம், நிச்சயதார்த்தம், சீமந்தம், பெண் பார்த்தல், உபநயனம் ஆகியவை செய்வதில் எந்த தவறும் இல்லை. சுப விசேஷங்களுக்கு பேச்சுவார்த்தை நடத்தலாம். அதற்கான ஏற்பாடுகளை செய்யலாம்.

## கிரகப்பிரவேசம் செய்யக்கூடாது

இந்த நாட்களில் செடி, கொடி மரங்களை வெட்டக்கூடாது, நார் உரிக்கக்கூடாது, விதை விதைக்கக்கூடாது, கிணறு, குளம், தோட்டங்கள் அமைக்கக் கூடாது, நிலம் மற்றும் வீடுகளில் பராமரிப்புகள் செய்யக்கூடாது, வாகனங்களில் நெடுந்தூரம் பயணம் செய்யக்கூடாது. முடி இறக்குதல், காது குத்துதல், புது வீட்டுக்கு குடிபோய் பால் காய்ச்சுதல், கிரகப் பிரவேசம் செய்தல், பூமி பூஜை செய்வது, கிணறு வெட்டுதல் போன்ற விவசாய வேலைகளை தொடங்குவது ஆகியவை தவிர்க்கப்பட வேண்டும்.

## குழந்தை பிறப்பு

நமது கலாசாரப்படி, ஆடி மாதத்தில் புதுமண தம்பதிக்கு ஆடி சீர் வைப்பது வழக்கம். சீர் வைத்து புதுப்பெண்ணை தாய் வீட்டுக்கு அழைத்து சென்று விடுவார்கள். ஆடி மாதத்தில் கருத்தரித்தால் சித்திரை மாதம் குழந்தை பிறக்கும்.

சித்திரை கடும் வெப்ப காலம் என்பதால் பிரசவித்த பெண்களுக்கு உடல் உபாதைகள், நோய் தொற்றுகள் ஏற்படும் வாய்ப்பும் அதிகம். இதை தவிர்க்கும் நோக்கிலேயே, ஆடியில் பெண்கள் கருத்தரிப்பதை தவிர்ப்பதற்காக தம்பதிகளை பிரித்து வைக்கும் வழக்கம் உருவானது. விதிப்படி சூரியன் உச்சத்தில் இருக்கும் போது குழந்தை பிறந்தால் அதை யாராலும் தடுக்க முடியாது.

# அமைதி

அமைதி ஒரு சிறந்த மகத்தான அன்பளிப்பு, வெகுமதி. இதை வாழ்க்கையால் மட்டுமே வழங்க முடியும்.வாழ்க்கையோ இயற்கையின் சீதனம்.

அமைதி என்றால் என்ன? எதையும் எதிர் பார்க்காமல் எந்தவிதமான நிபந்தனைகளும் இன்றி இருத்தல்.

எந்தவொரு தேர்வுகளும் இல்லாத நிலை என்றும் கூறலாம். பிறக்கும் முன்னே இருந்த உள்ளமும் இறந்த பின்பு இருக்கும் நிலையும் அமைதிக்கான உச்ச பட்ச விளக்கம். உயிரோடு இருக்கும் போதே இந்த உணர்வுகள் இருந்தால் அதுதான் அமைதி.

சரி, இருக்கட்டும், அமைதி தான் எல்லோரும் தேடிக் கொண்டே இருக்கும் பொருள். ஆனால் அமைதி என்பது உணர்வேயன்றி பொருளல்ல.

அந்த உணர்வு எங்கிருந்து வரும்? எப்போது? எப்படி? வரும். அது வேறு எங்கும் இல்லை. நமக்குள்ளே தான் இருக்கிறது.

உள்ளே தேடுங்கள். ஆசைகளே இல்லாத இடம் ஒன்று தென்படும். அதன்பின், ஆசைகளே தோன்றாத புள்ளி ஒன்று தெரியும்.

இந்த புள்ளியே துறவின் தொடக்கம். இல்லற வாழ்வில் இருந்து கொண்டும் துறவைத் தொடங்கும் புள்ளி இதுதான்.

தொடர்ந்து இந்த புள்ளியில் தோன்றுவது பேரானந்தம். இது கடவுள் தன்மையை காட்டும். வாழ்வின் முழுமையான நிலை அல்லது பரிபூர்ண நிலை என்பது இதுவே.

அதனால் அமைதிக்கு விலை கிடையாது என்கிறார்கள். அமைதிதான் வாழ்க்கை நமக்கு தரும் அன்பளிப்பு.

– ஓஷோ



# மகிமை வாய்ந்த கணேச சங்கு

காரியத் தடை, திருமணத் தடை நீக்கும், கணேச சங்கு:

இறைவன் படைப்பில் அதிசயத்தக்க வகையில் கணேச முக வடிவில் காணப்படும் சங்கு இது.

எதிலும் காரியத் தடை,சனிக்கிரஹ தோஷம், திருமணத் தடை இருப்பவர்கள் இந்த சங்கில் சிறிதளவு நீர் ஊற்றி, கையில் வைத்துக் கொண்டு,

**ஓம் ஹம் கணபதயே நமஹ**

என்று 70 முறை மந்திரம் செபித்து, அந்நீரை அருந்த நலம் பெருகும்.

மேலும் அடிக்கடி வாகன விபத்துக்களை சந்திப்பவர்கள், வாகனங்களில் கணேச சங்கை வைத்து வழிபட விபத்துக்கள் நேராமல் பாதுகாக்கும். இந்த சங்கின் விலை மிகவும் குறைவு தான்.




# திங்கள் கிழமை வரும் அமாவாசையின் சிறப்பு

## அரசமரத்தை சுற்றி ஆசி கூறினால் பலிக்கும்

திங்கள் கிழமையில் வரும் அமாவாசையில் அரசமரத்தை சிவ பஞ்சாட்சரம் (நமசிவய) சொல்லியபடி 108 முறைகள் வலம் வருபவர்களின் வாக்குவன்மை மிகவும் அதிகமாக மேம்படும். ஆன்ம பலமும் பெருகும். இது அவர்களுக்கு இயற்கைதரும் மிக உயர்ந்த சன்மானம்.

அதாவது திங்கள் கிழமையில் வரும் அமாவாசையில் அரசமரத்தை பஞ்சாட்சரம் சொல்லியபடி 108 முறைகள் வலம் வரவேண்டும். அவ்வாறு வலம் வந்தவர்கள் சுயநலம் இல்லாமல் பொது நலத்துடன் மற்றவரை ஆசிர்வதித்தால் அந்த ஆசிர்வாதம் பலிக்கும்.

திங்கள் கிழமை வரும் அமாவாசையின் மகத்துவம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. மேற்கண்ட நாளில் அரசமரத்தை சுற்றி வருபவரிடம் வாக்கு வன்மையும் ஆன்ம பலமும் அதிகரிக்கும், இதனால் அவர்களால் பல உயிர்கள் காக்கப்படலாம்.

நாம் வளர்க்கும் உயிர்களான, ஆடுகள் மாடுகள் முன்பாக நின்று “பயம் வேண்டாம் நீ பிழைத்துக்கொள்வாய்” என்று சொல்லி அந்த உயிரையும் காக்கலாம்.

நோய்வாய்ப்பட்டவர்களையும் இதுபோல ஆசி கூறலாம். ஆனால் இதனை பொது நலத்திற்காக மட்டுமே பயன் படுத்த வேண்டும்.

சுயநலத்திற்கு பயன்படுத்துபவர்களின் வாக்கு பலித்ததாக சான்றுகள் இல்லை.




GET IT ON Google Play
கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.
ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!


ஆன்மிகமலர் மெயில் புக்

# தியானமே பணியின் மிக உயர்ந்த வடிவம்

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: “பணி, பக்தி அல்லது அறிவாராய்ச்சி ஆகியவற்றைவிட தியானமே சிறந்தது. உண்மையாக தியானம் செய்வது என்பது பரம்பொருளின் மீது மட்டுமே மனதை ஒருமுகப்படுத்துதலாகும். இதுதான் ஆழ்ந்த தியானம். இதுவே மனிதன் ஆற்றக்கூடிய பணியின் மிக உயர்ந்த வடிவம்; மேலும் இதுதான் இறைவனைக் காண்பதற்காக மிகச் சிறந்த சமநிலையான மார்க்கமும் ஆகும். எப்பொழுதும் வேலை செய்து கொண்டிருந்தால், நீங்கள் இயந்திரத்தனமாகி, உங்கள் கடமைகளில் உள்ள முன்னீடுபாட்டினால் அவனை இழக்க நேரலாம்; உங்கள் பகுத்தறியும் சிந்தனை மூலமாக மட்டுமே நீங்கள் அவனை நாடமுற்பட்டால், சிக்கலான முடிவற்ற விவாதங்களில் அவனை இழக்க நேரலாம்; நீங்கள் இறைவனுக்காக பக்தியை மட்டுமே வளர்த்தால் உங்களுடைய வளர்ச்சி, உணர்ச்சிபூர்வமானதாக மட்டுமே ஆக நேரலாம். ஆனால் தியானம் இந்த எல்லா அணுகுமுறைகளையும் இணைத்து சமநிலைப்படுகிறது”.



“உழையுங்கள், உண்ணுங்கள், நடமாடுங்கள், சிரியுங்கள், அழுங்கள், தியானம் செய்யுங்கள். இவையெல்லாம் அவனுக்காக மட்டுமே. அதுதான் வாழ்வதற்கான சிறந்த வழி. அப்படிச் செய்யும்பொழுது நீங்கள் அவனுக்குச் சேவை செய்துகொண்டும், அவனை நேசித்துக் கொண்டும், அவனுடன் ஆழ்ந்த தொடர்பு வைத்துக்கொண்டும் உண்மையாகவே மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். உங்கள் எண்ணங்கள் மற்றும் செயல்களை, ஸ்தூல சரீரத்தின் ஆசைகள் மற்றும் பலவீனங்களின் கட்டுக்குள் இருக்க நீங்கள் அனுமதிக்கும் காலம் வரை, நீங்கள் அவனைக் காணமாட்டீர்கள். உங்களுடைய சரீரத்தின் அதிபதியாக எப்பொழுதும் இருங்கள். நீங்கள் ஆலயத்திலோ அல்லது தேவாலயத்திலோ அமரும்பொழுது சிறிதளவு பக்தியையும், சிறிதளவு பாகுபடுத்திக்காணும் அறிவுணர்ச்சியையும் ஒருக்கால் உணரலாம். ஆனால் அது போதாது. அவனுடைய இருப்பை நீங்கள் உண்மையில் உணரவேண்டுமென விரும்பினால், தியானம் என்னும் ஆழ்ந்த செயல் அவசியமாகிறது.”

“இரண்டுமணிநேர தியானத்திற்குப் பிறகு இறக்கும் அளவிற்கு நான் சலிப்படைந்து விடுவேன் என நீங்கள் நினைக்கலாம். இல்லவேயில்லை, எனது இந்தக் கடவுளை விட போதையூட்டக்கூடிய வேறெதையும் நான் உலகில் காணவில்லை.

என் ஆத்மாவின் அந்தப் பழமைவாய்ந்த மதுவை நான் பருகும்பொழுது என் இதயத்தில் வானளாவிய மகிழ்ச்சி படபடக்கின்றது. தெய்வீக ஆனந்தம் ஒவ்வொருவருக்குள்ளும் உள்ளது. சூரிய ஒளியானது, கரிக்கட்டி மீதும் வைரத்தின் மீதும் ஒரே அளவாக ஒளிர்கிறது. ஆனால் வைரம் ஒளியைப் பிரதிபலிக்கின்றது. பரம்பொருளை அறிந்து அதை பிரதிபலிப்பவை, அத்தகைய தெளிவான மனங்கள்தான்.”

“இவ்வாறாக தியானம் என்னும் ஆழ்ந்த செயலில் நீங்கள் இறைவனை அறிவதற்கான புதிருக்குத் தீர்வு உள்ளது. நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைப்பற்றி அல்ல; ஆனால், நீங்கள் என்ன செய்யவில்லை என்பதைப்பற்றித்தான் உங்களைக் குறைகூறுகிறேன். இறைவனுக்கென ஒதுக்க உங்களுக்கு நேரமில்லை என நீங்கள் நினைக்கிறீர்கள்.

இறைவனுக்கும் வேலை மும்முரத்தால் உங்களைப் பார்த்துக்கொள்ள நேரமில்லை என வைத்துக்கொள்வோம். அப் பொழுது என்னவாகும்? உங்கள் மனதை ஐம்புலன்கள் மற்றும் பழக்கங்கள் என்னும் கானல் நீரிலிருந்து விடுவியுங்கள். ஏன் அவ்வாறு மாயையில் மயங்கிக் கிடக்க வேண்டும்? இங்கு எப்பொழுதும் இருக்கவே முடியாத மிக அழகிய தேசத்தை நான் உங்களுக்குச் சுட்டிக் காட்டுகிறேன்.

உங்களை இரவு பகலாக மதி மயக்கவல்ல ஓர் இன்பத்தைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்கிறேன். உங்களைப்பரவசப்படுத்த புலனுணர்வுக் கவர்ச்சிகள் உங்களுக்குத் தேவையில்லை. உங்களது சரீரத்தையும் மனதையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவாருங்கள். உங்களுடைய புலன்களைக் கட்டுப்படுத்துங்கள்”.

“அன்புக்குரியவர்களே, நானும் ஒரு சமயத்தில் உங்களைப் போலவே இருந்தேன். உண்மையையும் இன்பத்தையும் தேடி நான் உலகில் திரிந்தேன். ஆனால் எனக்கு ஆனந்தம் தருவதாக உத்தரவாதமளித்த ஒவ்வொன்றும் எனக்குத் துன்பத்தையே தந்தது. ஆகவே நான் இறைவனை நேசிக்கத் திரும்பினேன். நீங்கள் அனைவரும் உங்களுடைய சொந்த, தெய்வீகத் தன்மையைக் கண்டறிந்து இறைவனின் சாம்ராஜ்யத்தை உங்களுக்காக வெற்றி கொள்ளவேண்டும்.”

## ஆன்மாவே உங்களைக் கரையேற்றும்

குருதேவர் மேலும் அருளுகிறார்: “இந்த ஆழ்ந்த உண்மைகள், கணப்பொழுதில் தோன்றி மறையும். எழுச்சியூட்டுதலுக்காக அல்ல: மாறாக உங்களுடைய மிக உயர்ந்த நன்மைக்காக உட்கிரகிக்கப்பட்டு, நடைமுறையில் செயற்படுத்தப் படவேண்டும். மக்கள் தமது சொந்த நன்மை எங்கே உள்ளது என்பதை மட்டும் தெரிந்து கொண்டால். தவறாகச் செயல்படுபவர்களுக்கு ஆன்மா ஒரு பகைவன். ஆன்மாவுடன் நட்பை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.

ஆன்மா உங்களைக் காப்பாற்றும்.ஆன்மாவை விட வேறு எதுவும் உங்களைக் கரையேற்றாது. அறியாமை, தீயப் பழக்கங்கள் ஆகிய தளைகள் உங்களைக் கட்டிவைத்துள்ளன. உங்கள் தவறான பழக்கங்களைப் பின்பற்று வதில் பிடிவாதமாக உள்ளதால் நீங்கள் துன்புறுகிறீர்கள்.

உங்களுக்குக் கிடைத்துள்ள அரிதான காலம், பயனின்றி நழுவிவிடும் முன்பு உங்கள் வாழ்க்கையைக் கொஞ்சம் முன்பாகவே கற்பனை செய்துப் பார்த்தால்! இந்துக்களிடையே ஒரு பழமொழி உள்ளது, ” குழந்தை, விளையாட்டில் மும்முரமாக உள்ளது. இளைஞன், இனக்கவர்ச்சியில் மும்முரமாக உள்ளான். வயதானவன், கவலைகளில் மும்முரமாக உள்ளான். இறைவனோடு மும்முரமாக உள்ளவர் எவ்வளவு குறைவு!”

“உலக ஆசைகளைப் பூர்த்தி செய்வதிலிருந்து இன்பம்கிடைக்குமென்ற கற்பனை எதிர்பார்ப்பை அகற்றுங்கள். செல்வச் செழிப்பு போதுமானதல்ல, ”மேன்மைமிக்க வாழ்வு” போதுமானதல்ல. நிரந்தர இன்பத்துடன் இருக்க

55
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

நீங்கள் விரும்புகிறீர்கள். உங்களுக்குள் உள்ள இறைவனைப் பற்றிக்கொண்டு, ஆன்மாவே தெய்வீகம் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ளுங்கள்.'' எங்கிருந்து நான் வந்துள்ளேன்?'' என்ற உங்கள் அறிவின் தலைசிறந்த கேள்விக்கு உங்களால் நிச்சயத்துடன் பதிலளிக்க முடிய வேண்டும்''.

“இறைவனும் அமரத்துவமும் கட்டுக்கதைகளல்ல. நீங்கள் ஓர் அழியும் மனிதன் என நம்பிக் கொண்டு இறப்பது உங்கள் உள்ளிருக்கும் ஆன்மாவிற்கு மிகப்பெரிய அவமானம். உங்கள் வாழ்நாளில் மாயையை, அறியாமையை வெல்ல முயற்சியே செய்யாததால் இறைவனின் புதல்வர்களாகிய நீங்கள் எத்தனை காலம் உதவியற்ற நிலையில், மரணத்தின் அரிவாளால் வெட்டுப்பட உங்களை அனுமதிக்கப்போகிறீர்கள்?”

விதுரர் நீதியுரை

மகாபாரதத்தில் விதுரர் திருதராஷ்டிரரிடம் கூறுகிறார்: ஒரு பண்டிதன் அடைய முடியாததை அடைந்துவிடவேண்டும் என்று முனைவதில்லை. தன்னிடமிருந்து நழுவிப்போனதை நினைத்து மன உளைச்சல்பட்டுக்கொள்வதும் அவன் வழக்கமன்று. தனது காரியங்களை ஒழுங்காகச் செய்வதற்காகவே அவன் பொருள் சேர்ப்பான்: பேராசை கொண்டு செல்வத்தை ஈட்ட மாட்டான். தர்மத்தின் பாதையிலிருந்து அவன் சிறிதும் அகலுவது கிடையாது.



பண்டிதனின் குணங்கள் இவையென்றால், மூடனின் குணங்கள் என்ன என்பதையும் கூறுகிறேன். ஓரளவு கற்றபிறகு மிகவும் கற்றுவிட்டதாக நினைப்பவன், ஏழையாக இருந்தாலும் செலவாளியாக இருப்பவன், கெட்ட வழியில் சென்றாவது செல்வத்தை ஈட்ட விரும்புகிறவன் ஆகியோர்கள் மூடர்களே! நண்பர்கள் விஷயத்தில் வஞ்சகமாக நடந்துகொள்பவன்: தன்னிடம் விருப்பமில்லாதவனை விரும்புகிறவன்: தன்னை விரும்புகிற மனிதர்களை அலட்சியப் படுத்துபவன்:

தானே வலியச் சென்று விரோதத்தைத் தேடிக்கொள்பவன்; எடுத்த காரியத்தை முடிப்பதில் முனையாமல், அதை நீட்டிக்கொண்டே போகிறவன்; தான் செய்யும் காரியத்தை சந்தேகத்துடனேயே செய்பவன்; எதிலும் தாமதம் செய்கிறவன் ஆகியோர்கள் மூடர்களாகவே கருதப்படுகிறார்கள். மூடனாக இருக்கிறவன் தன்னை யாரும் கேட்காதபோதே அறிவுரை கூறுகிறான். தன்னிடம் குற்றங்கள் இருக்கும்போது பிறரை குற்றவாளி என்று குறைகூறுகிறான். தன்னிடம் சக்தி இல்லாதபோது அவன் கோபம் கொள்கிறான். அவன் தெய்வத்தை வணங்குவதில்லை. அழைக்காத இடங்களில் எல்லாம் அவன் நுழைகிறான். மூடர்கள் சிறந்த உணவுகளை தாங்கள் மட்டுமே புசிப்பார்கள். மிகச்சிறந்த ஆடைகளை தாங்கள் மட்டுமே அணிவார்கள். அவர்களுடைய இந்தப் பழக்கங்கள் மிகவும் கொடியவை என்று கருதப்படுகின்றன.

மூடர்கள் பாவம் 'செய்கிறார்கள். ஒரு மனிதன் பாவம் செய்யும்பொழுது அதனால் வரக்கூடிய துன்பம் பலரைப்பற்றுகிறது.

அவனுடன் இருந்தவர்கள் அந்தத் துன்பத்தை அனுபவிக்கும்போது, பாவத்தின் விளைவிலிருந்து விடுபடுகிறார்கள்.

ஆனால் பாவத்தைச் செய்த அவன் தொடர்ந்து அதனால் பற்றப்படுகிறான். இவ்வாறு விதுரர் திருதராஷ்ட்ரனுக்கு அறிவுரை கூறுகிறார்.

மேலே கூறப்பட்டுள்ள மனிதர்கள் தன் இழிவான குணங்களால் ஏற்படுகின்ற செயல்களால் கீழ்நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் தம் தீவினைகளின் பலன்களை அனுபவித்த பின்னரே திருந்தி வாழ்வதற்கு வாய்ப்புள்ளது. இவர்களுக்கு அதுவரையிலும் நற்காரியங்களை செய்ய வேண்டும் என்ற எண்ணமும் வராது;

அதனால் இறைவனை நினைக்கவேண்டும் என்றும் அவனுக்காக வாழவேண்டும் என்னும் எண்ண மாட்டார்கள். இறைவனுக்காக வாழ்வதில் தான் மகிழ்ச்சி உள்ளது. அதுவேதான் உண்மையான வாழ்க்கை. ஏராளமான பாவகர்மங்கள் செய்கின்றவர்கள் ஏராளமான பிறவிகள் எடுத்தபின்னர் அதனால் ஏற்படும் விளைவுகளைப்பற்றி சிந்திக்கின்றனர்.

தாம் பல பாவங்கள் செய்துள்ளதைப் பற்றியும் அதன் விளைவுதான் தாம் அனுபவிக்கின்ற துன்பங்கள் என்றும் ஒருவன் சிந்திக்கத் தொடங்கினாலே அவன் தன் பாவங்களை உணரத்தொடங்குகிறான் என்பதை தீர்மானிக்கலாம். பலனை எதிர்பார்க்காமல் செய்கின்ற நல்ல கர்மங்களால் மட்டும்தான் பிறவியை ஒழிக்கமுடியும். அவ்வா.று, உணர்த்துவதும் இறைவனே! அது இறைவனின், கருணை என்பதே உண்மை. 'இறைவனின் கருணை' என்ற ஒன்று இவ்வுலகில் அல்லது இந்தப் பிரபஞ்சத்தில் இல்லையெனில் இந்த உலகில் எவருமே இன்புற இயலாது.

தம் பாவங்களை உணருபவன், பின்னர் பாவம் செய்ய அஞ்சுவான். அதுவே பெரும் பாக்கியமாகும்.' பாவம் செய்யபயப்படுபவன் பாக்கியசாலி' என்று மகான்கள் கூறுகின்றனர். பாவத்திற்கு அஞ்சுபவனுக்கு, பின்னர் துன்பங்கள் குறைய நேரும். அன்றிலிருந்து அவன் இறைவனை நினைக்கத் தொடங்குவான். அத்துடன், அவனுடைய மனம், வாக்கு, செயல் இவை தூய்மையடைய நேரும். இவ்வாறு அவனுடைய பாவங்கள் குறைவதும் அவன் மனம் தூய்மை அடைவதும் எல்லாம் அவனுள் உறைந்திருக்கும் இறைவனால் மட்டும் நிகழ்வதாகும். இவ்வாறு ஒரு பெரிய பாவியையும் அவனுக்குள்ளிருக்கும் ஆன்மா (இறைவன்) கரையேற்றும்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா
Cell No.9894595909

# கண்ணன் பிரம்மச்சாரி

கண்ணனுக்கு பல மனைவியர் இருந்தாலும்., அவர் தன்னை பிரம்மச்சாரி என்கிறார் எப்படி?

யமுனைக்கரையில் இருந்த ஒரு மாளிகையில் கண்ணனும், ருக்மிணியும் தங்கியிருந்தனர். ஒரு சமயம் யமுனை நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மறுகரையில், கண்ணனின் பக்தரான துர்வாச முனிவர் நல்ல பசியுடன் காத்திருந்தார்.

பக்தனின் பசி பொறுக்காத கண்ணன், “ருக்மிணி! என் பக்தர் துர்வாசர் கடும்பசியுடன் அக்கரையில் காத்திருக்கிறார். நீ போய் உணவு பரிமாறி விட்டு வா,'' என்று உத்தரவிட்டார். “ஸ்வாமி.! ஆற்றில் வெள்ளம் அதிகமாக இருக்கிறதே! எப்படி கடந்து செல்வது?'' என்றாள் அவள்.

“நீ யமுனையின் அருகில் போய், 'நித்ய பிரம்மச்சாரியான கிருஷ்ணர், துர்வாச முனிவருக்கு உணவளிக்க என்னை அனுப்பியுள்ளார். எனவே நீ வழி விடு' என்று சொல் ஆறு இரண்டாகப் பிரிந்து வழிவிடும்,'' என்று பதிலளித்தார் கண்ணன்.

என்ன சொல்கிறார் இவர்! பல மனைவியருடன் வாழும் இவரா பிரம்மச்சாரி! எதற்காக இப்படி சொல்கிறார்?' அவள் குழம்பியபடியே., கிருஷ்ணர் சொன்னதைச் செய்தாள்.

யமுனையும் வழிவிட்டது. அவள் போய் வந்ததும்., அவளது முகக்குறிப்பைக் கொண்டே அவளது சந்தேகத்தைப் புரிந்து கொண்ட கண்ணன், “யார் ஒருவன் உலகமக்களைப் பக்தி வழியில் திருப்ப முயற்சிக்கிறானோ அவன் பிரம்மச்சாரியாவான். அந்தப் பணியை நானும் செய்கிறேன். எனவே., நானும் பிரம்மச்சாரி தான். இதை யமுனை புரிந்து கொண்டு வழிவிட்டது'' என்றார்.



பக்தி நெறியில் உங்கள் மனதைச் செலுத்துவதுடன். பிறருக்கும் வழிகாட்டுங்கள். புரிகிறதா!

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com



ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033




# "ஆட்கொண்டேஸ்வரர்"

"சோகமாக" ஒரு கற்சிலையை வடித்தான் ஒருவன். அச்சிலை சோகமாய் இருந்து பழக்கப்பட்டதே இல்லை. சிலையை வடித்த வன் சோகமாய் இருந்திருக்கிறான். அச்சிலையோ சோகத்தை எடுத்துக்காட்டியது.

இதிலே கடவுள் இருக்கிறான் என்பதை எண்ணுங்கள். ஒன்று கடவுள் புரிந்துவிடும். இல்லையேல் சோகம் புரிந்துவிடும்.

இதேவண்ணம் சிலைகளில் கலையை வடித்தான். அக்கல், என்றுமே கலையை அறியப் போவதில்லை. ஆனால், மனிதன் கலையை அறிகிறான். அக்கல்லைக் கலையாகவே பார்க்கிறான்.

இப்படியே.. கடவுளைக் கல்லிலும், புல்லிலும் கடவுளாகவே பார்க்க முடியும். இத்திறனை மனிதனே..நீ கொள்..இல்லையேல் கல்லையும், புல்லையும் கல்லாகவும், புல்லாகவும் பார்க்கின்ற திறனைக் கொள்.

அப்படியே, கல்லிலே காமத்தை வடித்தனர். இன்றுவரை அக்கற்கள் காம, விகாரத்தைக் கொண்டே இல்லை. உலகம், இன்றுவரை அஜந்தா, எல்லோரா, கொனாரக், பேளூர் சிற்பங்களை வடித்த தகைமையாளர்களை அழியும் காமுகர்கள் என்று வசை பாடியதே இல்லை.

கூர்ந்து நோக்குங்கள். மனிதனிடம் விளங்க வேண்டிய கருத்துக்கள் விளக்க முடியாத சிற்பங்கள் விளக்கிக் கொண்டே இருக்கின்றன. விளங்கிக் கொள்ள வேண்டிய மனிதன், இவைகளைப் பார்த்து விளங்கிவிடுகிறான். பிரகாசிக்கிறான். இக்கருத்தைச் சொல்லிக் கொடுத்தவனே ஒரு கடவுள் என்றான் தில்லைநாயகம்.



விகாரம் என்பது ஒரு அற்புதமான பிரகாசத்தைத் தரும் விளக்கம். இப்பக்தி யைத் தருகின்ற கடவுள்.."ஆட்கொண்டேஸ்வரர்" என்ற கடவுள்.

"மேலெழுந்தவாரியான மன ஓட்டம்" விகாரமாக அமைந்தால் மனிதன் எல்லோரா, அஜந்தா..சிற்பங்களைக் கண்டு காமியாகிவிடுவான். இப்பட்டியலைச் சேர்ந்ததுதான் வெறுப்பு, கோபம், கசப்பு உணர்வுகள். அபசாரம் என்பதும், மடி என்பதும், ஆசாரமின்மை என்பதும் மேலெழுந்தவாரியான மன ஓட்டமே.

நாயன்மார்களால் பாடல் பெற்ற தலமே திருவையாறு. அங்கேதான் இருக்கிறார் ஆட்கொண்டேஸ்வரர். இவரது சன்னிதியில் குங்கிலியம் என்ற சாம்பிராணியை பக்தர்கள் புகைத்துக் கொண்டே இருப்பார்கள்.

இதுதான் ஆட்கொண்டேஸ்வருக்கு வழிபாடு. தேள்கடி, பாம்புக்கடி.. மற்றும் விஷப்பூச்சிகளின் கடிக்கு இப்பெருமான் உடனே நிவாரணம் அளிக்கிறார். என்பதே இங்கு வேண்டுதல்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு
சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது
மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன்,
போன் 098410 28028


ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# இந்து மதத்தைப்போல்
# சகிப்புத்தன்மை வாய்ந்த மதம்
# உலகில் வேறு எதுவும் இல்லை

ஈ.வெ.ராமசாமி (பெரியார்) சேலத்தில் நடத்தியது போல் சென்னையிலும் ஒரு ஆபாச ஊர்வலம் நடத்த முயன்ற போது கண்ணதாசன் அவர்களால் எழுதப்பட்ட கட்டுரை இது.

இதை தொடர்ந்து அந்த ஆபாச ஊர்வலம் கைவிடப்பட்டது.

**கவிஞர் கண்ணதாசனின் எண்ணங்கள் ஆயிரம் என்ற நூலிலிருந்து**

நான் ஒரு இந்து. இந்து என்பதில் நான் பெருமைப்படுகிறேன்.

நான் எல்லா மதத்தினரையும் மனமாரநேசிக்கிறேன்; ஆனால் இந்துவாகவே வாழ விரும்புகிறேன்.

நான் கடவுளை நம்புகிறேன்; அவனைக் காட்டியவனைப் போற்றுகிறேன்; அந்தக் கடவுளைக் கல்லிலும், கருத்திலும் கண்டு வணங்குகிறேன்.

ஆன்மா இறைவனோடு ஒன்றிவிடும்போது, அமைதி இருதயத்தை ஆட்சி செய்கிறது. நாணயம், சத்தியம், தர்மம் இவற்றின் மீது நம்பிக்கை பிறக்கிறது.

நேரான வாழ்க்கையை இருதயம் அவாவுகிறது. பாதகங்களை, பாவங்களைக் கண்டு அஞ்சுகிறது.

குறிப்பாக ஒரு இந்துவுக்குத் தன் மத அமைப்பின் மூலம் கிடைக்கும் நிம்மதி, வேறு யாருக்கும் கிடைப்பதில்லை.

கடைசி நாத்திகனையும், அது ஆத்திகன் என்றே அரவணைத்துக் கொள்கிறது.

என்னை திட்டுகிறவன்தான் அடிக்கடி நினைத்துக் கொள்கிறான்; ஆகவே அவன்தான் முதல் பக்தன்" என்பது இறைவனின் வாக்கு.

இந்து மதத்தைப்போல் சகிப்புத்தன்மை வாய்ந்த மதம் உலகில் வேறு எதுவும் இல்லை.

நீ பிள்ளையாரை உடைக்கலாம்; பெருமாள் நாமத்தை அழிக்கலாம்; மதச்சின்னங்களை கேலி செய்யலாம்; எதைச் செய்தாலும் இந்து சகித்துக் கொள்கிறான்.

ஏதோ பரம்பரையாகவே பகுத்தறிவாளனாகப் பிறந்தது போல் எண்ணிக் கொண்டு, பாத்திரத்தை நிரப்புவதற்காகவே சாஸ்திரத்தைக் கேலி செய்யும் பகுத்தறிவுத் தந்தைகள் இஸ்லாத்தின் மீதோ, கிறிஸ்துவத்தின் மீதோ கைவைக்கட்டும் பார்க்கலாம்.

**ஏதோ பரம்பரையாகவே பகுத்தறிவாளனாகப் பிறந்தது போல் எண்ணிக் கொண்டு, பாத்திரத்தை நிரப்புவதற்காகவே சாஸ்திரத்தைக் கேலி செய்யும் பகுத்தறிவுத் தந்தைகள் இஸ்லாத்தின் மீதோ, கிறிஸ்துவத்தின் மீதோ கை வைக்கட்டும் பார்க்கலாம்.**



கடந்த நாற்பது வருசங்களில் ஒரு நாளாவது அதற்கான துணிவு ஏற்பட்டதாக தெரியவில்லையே!

பாவப்பட்ட இந்து மதத்தை மட்டுமே தாக்கித் தாக்கி, அதை நம்புகிற அப்பாவிகளிடம் 'ரேட்டு' வாங்கிச் சொத்துச் சேர்க்கும் 'பெரிய' மனிதர்களைத்தான் நான் பார்த்திருக்கிறேன்.

அவர்கள் பேசுகிற நாத்திக வாதம், அவர்கள் 'குடும்பம் நடத்தும் வியாபாரம்' என்பதை அறியாமல், வாழ்கையையே இழந்து நிற்கும் பல பேரை நான் அறிவேன்.

பருவ காலத்தில் சருமத்தின் அழகு மினுமினுப்பதைப் போல், ஆரம்ப காலத்தில் இந்த வாதத்தைக் கேட்டு ஏமாந்தவர்களில் நானும் ஒருவன்.

நடிகையின் 'மேக் அப்'-பைக் கண்டு ஏமாறுகிற சராசரி மனிதனைப்போல், அன்று இந்த வாதத்தைக் கேட்டு ஏமாந்தவர்களில் நானும் ஒருவன்.

அந்த கவர்ச்சி எனக்கு குறுகிய காலக் கவர்ச்சியாகவே இருந்தது இறைவனின் கருணையே!

என்னை அடிமை கொண்ட கண்ணனும், ராமனும் இன்று சந்திர மண்டலத்துக்குப் பயணம் போகும் அமெரிக்காவையே அடிமைக்கொண்டு, ஆன்மீக நெறியில் திளைக்க வைத்திருக்கிறார்கள்.

அமெரிக்காவை விடவா ஈரோடு பகுத்தறிவில் முன்னேறிவிட்டது? வேண்டுமானால் 'பணத் தறிவில்' முன்னேறிவிட்டது என்று சொல்லலாம்.

ஆளுங் கட்சியாக எது வந்தாலும் ஆதரித்துக் கொண்டு, தன் கட்சியும் உயிரோடிருப்பதாகக் காட்டிக் கொண்டு, எது கொடுத்தாலும் வாங்கிக் கொண்டு வாழ்கையை சுகமாக நடத்துவதற்கு, இந்த நாத்திக போலிகள் போட்டிருக்கும் திரை, பகுத்தறிவு!

உலகத்தில் நாத்திகம் பேசியவன் தோற்றதாக வரலாறு உண்டே தவிர, வென்றதாக இல்லை.

இதை உலகமெங்கும் இறைவன் நிரூபித்துக் கொண்டு வருகிறான்.

அவர்கள் எப்படியோ போகட்டும். இந்த சீசனில் வாழ்ந்து கொண்டிருக்கும் சில மனிதர்கள் கோவில்களுக்கு முன்னால் பகுத்தறிவு விளையாட்டு விளையாடிப் பார்க்கலாம் என்று கருதுகிறார்கள்.

இதை அனுமதித்தால், விளைவு மோசமாக இருக்கும். நம்பிக்கை இல்லாதவன் கோவிலுக்கு போக வேண்டாம். நம்புகிறவனை தடுப்பதற்கு அவன் யார்?

அப்பாவி இந்துக்கள் பேசாமல் இருக்க இருக்க சமுதாய வியாபாரிகள் கோவிலுக்கு முன் கடை வைக்கத் தொடங்குகிறார்கள்.

வெள்ளைக்காரனின் கால்களை கட்டிப்பிடித்துக் கொண்டு 'போகாதே போகாதே என் கணவா' என்று பாடியவர்களுக்கு நாட்டுப் பற்று எங்கிருந்து வரும்?

நாட்டு பற்று இல்லாதவர்களுக்கு தெய்வப் பற்று எங்கிருந்து வரும்?

தெய்வப் பற்று இல்லாதவர்களுக்கு நாணயம், நேர்மை இவற்றின் மீது நம்பிக்கை எங்கிருந்து வரும்?

இந்த நாலரை கோடி (அன்று) மக்களில் நீங்கள் சலித்துச் சலித்து எடுத்தாலும், நாலாயிரம் நாத்திகர்களைக் கூட காண முடியாது.

பழைய நாத்திகர்களை எல்லாம் நான் பழனியிலும், திருப்பதியிலும் சந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

– கவிஞர் கண்ணதாசனின் எண்ணங்கள் ஆயிரம் என்ற நூலிலிருந்து

www.aanmeegamalar.com

# அனுமனின் பெருந்தன்மை



ராவண வதம் முடிந்தது. விபீடணனுக்கு பட்டாபிஷேகம் செய்து அவனை இலங்கையில் அரசனாக்கினான் ராமன். அதோடு கூடவே அவன் நீண்ட நாள் வாழவேண்டும் என்ற வகையில் 'சிரஞ்சீவியாக இரு' என்று வாழ்த்தினான். அவ்வாறு ராமன் வாழ்த்தியபோது அது கேட்டு திடுக்கிட்டாள் சீதை. தயக்கத்துடன் அனுமனைப் பார்த்தாள். அனுமனோ கண்மூடி உள்ளுக்குள்ளேயே ராம ஜபன் பண்ணிக் கொண்டிருந்தான்.

சீதையின் தடுமாற்றத்தை பார்த்த ராமன் குழம்பினான். 'விபீடணன் சிரஞ்சீவி பட்டம் பெற்றதற்கு நீ ஏன் வருத்தப்படுகிறாய்?' என்று சீதையிடமே காரணம் கேட்டார்.

அதற்கு சீதை தணிந்த குரலில், "நீங்கள் விபீடணனுக்கு சிரஞ்சீவி பட்டம் கொடுத்ததில் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால் அசோகவனத்தில் தங்கள் தூதுவனாக வந்து எனக்கு உயிரளித்த அனுமனுக்கு நான் சிரஞ்சீவி பட்டம் கொடுத்தேன். ஒருவேளை அனுமன் அதனால் வருத்தப்படலாம். தனக்கு சமமாக வருவதை அனுமன் விரும்புகிறானோ இல்லையோ?" என்று கூறினாள்.

ராமன் சிறிதும் தயங்காமல் அனுமனிடம் சீதையின் குழப்பத்தை தெரிவித்தான்.

அனுமன் பணிவுடன் பதிலளித்தான்,"ஐயனே, சிரஞ்சீவி என்பவர் யார்? இந்த உலகமே அழிந்தாலும் தான் அழியாதவன். ஒரு காலகட்டத்தில் இந்த பிரபஞ்சமே அழிந்த பிறகு சிரஞ்சீவியான நான் மட்டும் தனித்து இருப்பேன். யாராவது ராம நாமன் சொல்ல அதை காது குளிர, மனம் குளிர கேட்பதுதானே எனது பொழுதுபோக்கு? தனியாய் இருக்கும் எனக்கு இப்போது விபீடணன் துணை என்பதில் மிகுந்த சந்தோஷம். அவர் ராம ஜபம் சொல்ல சொல்ல நான் உள்ளம் உருக கேட்டுக் கொண்டிருப்பேன்."

அனைவரும் நெகிழ்ந் தார்கள்......!



# பஞ்சமுக அனுமனுக்கு நாள்முழுவதும் லஷார்ச்சனை



திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டத்தில் உள்ள வடகுடி கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ விஜயவீர பஞ்சமுக ஆஞ்சநேயர் திருக்கோயிலில் உள்ள அனுமன் மலைகளில் இருந்து தாவும் வண்ணம் பத்து கைகளில் அமிர்தம், மரம், மலை, கத்தி, பாம்பு, கேடகம், புத்தகம், கலப்பை, கட்வாங்கம், அங்கும் இவைகளை கைகளில் ஏந்தியவண்ணம், கருடன், சிங்கம், வராஹம், குதிரை இவற்றின் முகங்களை கொண்டு அற்புதமாக பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

பக்தர்களுக்கு தனம், தான்யம், அறிவு, ஆரோக்கியம், பலம், வினயம், புகழ், பக்தி, பொறுமை, நல்மனைவி, புத்ரன், மனநிம்மதி, கல்வியில் தேர்ச்சி, உத்யோக உயர்வு போன்றவற்றை வழங்கும் சிறப்பை பெற்று விளங்குகிறார்.

இவ்வளவு சிறப்பு பெற்ற அனுமனுக்கு சித்திரைமாதம் 11ம் நாள் (24.04.2019) அன்று காலை 8 மணிமுதல் இரவு 8 மணி வரை நாள் முழுவதும் லஷார்ச்சனை நடைபெற உள்ளது.

இந்த அற்புத நிகழ்வில் பக்தர்கள் கலந்து கொண்டு மேற்கண்ட பலன்களைப் பெற்று உடல் நலமும், குடும்ப நலனையும் பெற கோவில் நிர்வாகம் அழைக்கிறது.

மேலும் இத்திருக்கோயில் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள என்.ஜெயராம பட்டாச்சார்யார், தொலைபேசி எண் 9443662782 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.






மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” aanmeegamalar.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்

# ராம நவமி



சித்திரை சுத்த நவமியை ராமநவமி என்று வழங்குகிறோம். ராமனின் பிறந்தநாளை ராமநவமியாக கொண்டாடுகிறோம். ஸ்ரீராமனின் சிறப்புக்களையும் ஹிந்து ராஜ்ய ஸ்தாபனத்தின் உன்னதத்தையும் சிறிது தெரிந்து கொள்வோம்.

### ஸ்ரீராமா என்ற பெயரின் அர்த்தம்

ஸ்ரீராமா: ஸ்ரீ என்பது, கடவுளின் ஆறு குணங்களில் ஒன்று, பகவானின் ஆறு குணங்கள் ஜெயம், ஸ்ரீ(தெய்வீக சக்தி, தெய்வீக அழகு ஆகியவை), தயை, வைராக்கியம், ஞானம் மற்றும் ஐஸ்வரியம். இலங்கையில் ராவணனை,வெற்றிக் கொண்டு சீதைப்பிராட்டியுடன் அயோத்திக்கு திரும்பிய போது, மக்கள் அவரை 'ஸ்ரீ ராமா'என்று அழைத்தனர். ராமர் தமது தெய்வீக சக்தியை வெளிப்படுத்திய பின் எல்லோரும் அவரை 'ஸ்ரீ ராமர் 'என்று அழைக்க முற்பட்டனர்.

### ராமருடைய குணங்கள்

1. லட்சிய மகன்: பெற்றோர் சொல்லுக்கு அடங்கிய மகனாக வாழ்ந்தும் சில சமயங்களில் அவர்களுக்கு அறிவுரையும் கூறினார். உதாரணமாக, நாட்டை விட்டு 14 வருடங்கள் காட்டில் வாசம் செய்ய புறப்பட்ட போது "இதற்காக தாங்கள் வருத்தப்படக் கூடாது" என்று பெற்றோர்களுக்கு அறுதல் கூறினார். எந்த கைகேயினால், ராமன் பதினான்கு வருடங்கள் கானகத்திற்குச் சென்றானோ அதே கைகேயி மாதாவிடம், கானகத்திலிருந்து திரும்பி வந்த பிறகு, ராமன் என்றும் மாறாத அன்புடன் நமஸ்காரம் செய்கிறான்.

2. லட்சிய சகோதரன்: இன்றைக்கும் சகோதர பாசத்தை விளக்க மக்கள் ராமர்,லக்ஷ்மணனிடம் காட்டிய அன்பை முன் உதரணமாக கூறுவர்.

3. லட்சிய அரசர்: தன்னுடைய பிரஜைகள் சீதையை சந்தேகப் பட்டதன் பேரில், ராஜ தர்மத்தைக் கடைபிடிக்க வேண்டி சீதையைத் துறந்தார். இதை காளிதாஸ் உருக்கத்துடன் கூறுகிறார்: "மக்களுக்காக சீதையைத் துறந்தது இல்லத்திலிருந்து இதயத்திலிருந்தல்ல."

4. லட்சிய எதிரி (சத்ரு): ராவண சம்ஹாரம் முடிந்த பின் விபீஷணன் அண்ணனுடைய இறுதிச் சடங்கைச் செய்ய மறுத்தான். அப்போது ராமன், சாவிற்குப் பின் பகை உணர்ச்சி பாராட்டக் கூடாது. நீ செய்யவில்லையெனில் நான் செய்ய வேண்டி வரும். ஏனெனில் ராவணன் எனக்கும் சகோதரனே" என்றார்.

5. தர்மத்தின் வழி நடப்பவன்: தர்மம் வகுத்த நெறிகளை வழுவாது கடைபிடித்ததால்ராமன் 'மரியாதா புருஷோத்தமன்' என்றுஅழைக்கப்படுகிறார்.

### ஹிந்து ராஜ்ய ஸ்தாபனத்தின் முக்கியத்துவம்.

ஹிந்து ராஜ்ய ஸ்தாபனத்தின் அவசியத்தைப் பார்ப்பதற்கு முன் 'ஹிந்து' என்ற வார்த்தையின் அர்த்தத்தைத் தெரிந்து கொள்வது அவசியமாகிறது. இந்த வார்த்தை சமீபத்தில் ஏற்பட்டதால், பகவத்கீதை போன்ற புனித கிரந்தங்களில் இவ்வார்த்தை கிடையாது. ஆனால் மேரு தந்திரத்தில், ஹிந்து என்றால் 'ஹினானி குணானி தூஷியதி இதி ஹிந்து' என குறிப்பிட்டுள்ளது. அதாவது எவனொருவன் தன் ஹீனமான தமோ குணங்களை விட்டொழித்து சாத்வீக தன்மையை அதிகரித்துக் கொள்கிறானோ அவனே ஹிந்துவாகிறான். இதிலிருந்து ஹிந்து ராஜ்யம் என்பது ஸாதகர்களான அனைவரின் கூட்டத்தைக் குறிக்கிறது. சத்திய யுகத்தில் உலகமெங்கும் ஹிந்துக்களே இருந்தனர். எங்கும் சாந்தியும் அமைதியும் நிலவியது.

ஸனாதன ஹிந்து தர்மத்தில் நான்கு புருஷார்த்தங்கள் உள்ளன.

1 தர்மம் (தர்மவழி நடந்து சமூகத்தை உன்னத நிலையில் வைப்பது).

2 அர்த்தம் (தர்மவழிப்படி செல்வத்தை சம்பாதிப்பது).

3. காமம் (தர்மவிரோதமில்லாத ஆசைகள்).

4. மோக்ஷம் (பிறப்புஇறப்பு எனும் சுழற்சியிலிருந்து முக்தியடைவது).

இதில் தர்மத்தை அனுசரிப்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால் மோக்ஷத்தை அடைய விரும்பி யாரும் வாழ்க்கை நடத்துவதில்லை. சமூகத்தின் இன்றைய சீர் குலைந்த நிலைக்கான காரணம் இதுவே. ஹிந்து ராஜ்ய ஸ்தாபனத்தின் மூலமே இச்சமூகத்தில் பிறப்பு ஏற்பட்டவருக்கு தர்மத்தை அனுசரிக்கவும், தனி மனிதனுக்கு இப்பிறவி எடுத்ததின் பயனாக மோட்சத்தை எய்திடவும் செய்திடல் முடியும்.

1. முதல் வகை மனிதன், தர்மத்தை விடுத்து, பணம் சம்பாதித்து தன் ஆசைகளைப் பூர்த்தி செய்வதிலேயே குறியாக இருப்பான். இறுதியில் அவனுடைய கர்மாக்களுக்கேற்ப புவர்லோகம் சென்று பின் மறுபடியும் பிறப்பான்.

2. இரண்டாம் வகை மனிதன் தர்மகோட்பாடுகளை சிறிதளவு கடைபிடித்து ஸ்வர்க்கலோகம் வரை செல்வான். பின்பு பூலோகத்தில் மறுபடியும் பிறப்பான்.இவ் விரு வகை மனிதர்களுமே சமூகத்தில் பெரும்பான்மையினராக உள்ளனர்.

3. மூன்றாமவர், தீய நோக்கத்துடன் தீய காரியங்களில் ஈடுபட்டு, நரகத்திற்குச் சென்று அங்கிருந்தும் இங்கேயுள்ளவர்களைத் துன்புறுத்துவர்.

4. நான்காமவர் சமூகத்தில் தனித்து காணப்படும் இவர்கள், மோக்ஷமடைவதை தங்கள்

லட்சியமாகக் கொண்டவர்கள்.

இடைவிடாது ஆன்மிக சாதனை செய்து தங்கள் ஆன்மீக நிலையை சிறிது சிறிதாக 50 60 சதவீதம் உயர்த்திக் கொண்டு மோக்ஷப் பாதையில் செல்வார்கள். ஆனால் இத்தகையோர் சமூகத்தில் அரிதாகவே காணப்படுகின்றனர்.

ஆனால் ராமராஜியத்தில் இருந்த அனைவருமே ஆன்மீக ஸாதனை செய்பவர்களாக இருந்தனர். அதனாலேயே ஸ்ரீராமனை அரசனாக அடையும் பாக்கியம் அவர்களுக்கு கிடைத்தது. ராமாயணம் என்ற வார்த்தை ‘ரம்’ ‘அயனம்’ என்ற வார்த்தைகளின் சேர்க்கையாகும் ‘ரம் என்றால் ஆனந்தமாய் இருப்பது.’அயனம்’ என்பது ஸப்த லோகங்களையும் கடந்து மோக்ஷமடைவது.

ராமாயணம் என்றால் ஆனந்தமாய் ஸப்த லோகங்களையும் கடந்து முக்தியடையச் செய்யும் பாதை என்று பொருள். அதே போல், இந்த ஹிந்து ராஜ்யத்தில் பங்கேற்க நாமும் ஆன்மிக ஸாதனை செய்து நம் ஆன்மிக நிலையை உயர்த்திக் கொள்வது மிகவும் அவசியமாகிறது.

இறைவனுடைய நாமஜபத்தைச் செய்து, தீய குணங்களை அழித்து ஹிந்து தர்மத்திற்காக உடல், மனம் செல்வம் ஆகியவற்றை அர்ப்பணித்து ஸாதனை செய்வதே நம் ஆன்மீக நிலை உயர்வதற்கான வழியாகும்.

வருகின்ற ஸ்ரீராமநவமி சுப தினத்தில், ஆன்மீக ஸாதனை செய்து ஹிந்து ராஜ்ய ஸ்தாபனத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்ற சூளுரையை அனைவரும் எடுத்துக் கொள்வதே, ஸ்ரீராமனுக்கு நாம் செய்யும் மிகப் பெரிய அர்ப்பணமாகும்.

ஸ்ரீராம ஜெய ராம ஜெய ஜெய ராம

தகவல்:

ஹிந்து ஜனஜாக்ருதி ஸமிதி
போன்: 9380949626

# பெரியவாவுக்கு ஏற்பட்ட காய்ச்சலை குணப்படுத்திய

# விஷ்ணுசகஸ்ர நாம பாராயணம்



கரூர் பண்டிட் ராம சர்மா என்ற ஆயுர்வேத வைத்தியர். சக்தி விலாச வைத்திய சாலையை நிறுவி மருத்துவம் பார்த்தவர்.

ராமசர்மா மஹா பெரியவாவின் பக்தர். பெரியவா கரூர் வந்தால் அவர் இல்லத்தில் தான் தங்குவார்.

ஒரு முறை பெரியவா தனக்குக் காய்ச்சல் அறிகுறி இருப்பதாகவும், ராமசர்மாவைக் காஞ்சிபுரம் வருமாறும் சொல்லியனுப்பினார். ராமசர்மாவும் வந்தார்.

அவருடைய மருந்துப் பெட்டியைப் பார்த்து பெரியவா முகத்தில் புன்முறுவல்! "உன்னைத்தான் வரச் சொன்னனே தவிர, மருந்துப் பெட்டியோடு வான்னு சொல்லலியே!" என்றார். ராமசர்மா திகைத்தார்.

"உங்களுக்கு காய்ச்சல் என்று சொன்னதால், மருந்துப் பெட்டியோடு வந்தேன்!" என்றார்.

"உடல் என்றிருந்தால் எப்போதாவது காய்ச்சல் வருவது சகஜம் தான். காய்ச்சலே உடலைக் குணப்படுத்தத் தானே வருகிறது! அது சரி... நோயைக் குணப்படுத்த மருந்து எதற்கு? அதற்கு வேறொரு வித்தியாசமான மருந்து இருக்கிறது. அதைப் பிரயோகம் பண்ணத் தான் உன்னை வரச் சொன்னேன்.."

ராமசர்மாவுக்குப் புரியவில்லை. அமைதி காத்தார். பெரியவா தொடர்ந்தார். "நீ குளிச்சுட்டுத் தான் வந்திருப்பாய்.. இரு... நான் இன்னொரு முறை குளிச்சுட்டு வந்துடறேன்! "

காய்ச்சல் இருக்கும் போதுகுளிக்கிறேன் என்கிறாரே! ராமசர்மாவின் மனம் பதறியது. ஆனால் மறுத்து எதுவும் சொல்லத் தோன்றவில்லை. பெரியவா வரும் வரை காத்திருந்தார்.

குளித்து விட்டு வந்த பெரியவா தன் உடல் உஷ்ணத்தை அளந்து பார்க்கச் சொன்னார். தெர்மாமீட்டர் மூலம் பார்த்ததில் காய்ச்சல் இருப்பது உறுதியானது.

"நல்லது... நாம் இருவரும் இப்போது விஷ்ணு சகஸ்ர நாமம் ஜெபிக்க போகிறோம்.." என்றார் பெரியவா.

இருவரும் இணைந்து ஜெபித்தனர். பாராயணம் நிறைவடைந்ததும் பெரியவா உடல் வெப்பத்தை மறுபடி சோதிக்குமாறு கூறினார்.

என்ன ஆச்சரியம்! காய்ச்சல் முற்றிலும் குணமாகி இருந்தது!

உடனே பெரியவா சர்மாவிடம், "விஷ்ணு சகஸ்ர நாம பாராயணம் செல்வத்தை மட்டுமல்ல, ஆரோக்கியம் உள்ளிட்ட எத்தனையோ பயன்களைத் தரக் கூடியதுன்னு ஓயாம சொல்றேன். ஜனங்களும் கேட்கறா. அவாளுக்கு அது உண்மைதான்னு நிரூபிச்சுக் காட்ட வேண்டாமோ? அதுக் குத்தான் இந்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திண் டேன்.

**கடவுள் நாமம் பிறவிப் பிணியைத் தீர்க்கும்னு தமிழ் சொல்றது. பிறவிப் பிணியையே நீக்கும்ன்னா, பிறவியில் வர்ற பிணியை நீக்காதா?** நோயாளிகளுக்கு நீ வழக்கம் போல மருந்து கொடு. வியாதி வந்தா மருந்து சாப்பிட வேண்டியதுதான். ஆனால், கூடவே விஷ்ணு சகஸ்ர நாமம்ங்கிற மருந்தையும் சேர்த்துப் பயன்படுத்தலாமே?

உன்னைத் தேடி வர்றவா கிட்ட, நீ இதையும் உன் பிரிஸ்க்ரிப்ஷன்ல சேர்த்துக்கலாம் இல்லையா? அதுக்கு உனக்கு நம்பிக்கை வரத்தான், உன்னை வரச் சொன்னேன். காந்தி இயற்கை வைத்தியத்தைக் கொண்டாடினாருன்னு உனக்கு தெரியும்.

இயற்கை வைத்தியத்துல பிரார்த்தனைக்குத்தான் முதலிடம்.."

என சொல்லி விட்டு குழந்தை போல் சிரித்தார் பெரியவா...


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# மந்திரங்கள் உச்சரிப்பின் அற்புத பலன்கள்

மனிதனுக்கு உள்ள ஆறாம் அறிவைக் கொண்டு, அடுத்த நிலையை அறிய உணர்வதில் ஒரு சீரான சப்த அதிர்வுகளுக்கு பெரும் பங்கு உண்டு.

இதைப் போன்ற தேவதை வசிய சக்தியை உடையவை மந்திரங்கள் என்று அழைக்கப் படுகின்றன.

வேதத்தில் மந்திர சாஸ்திரம் முக்கிய பங்கு வகிக்கிறது.

நடைமுறையில் மந்திரசாஸ்திரம் என்றால் தீய விளைவுகளுக்கு பயன்படும் விஷயமாக எண்ணுகிறார்கள்.

மந்திர சாஸ்திரத்தை சரியான முறையில் பயன்படுத்தினால் சிறந்த நிலையை அடையலாம்.

யோக சாஸ்திரம் பரமாத்மாவை அடையும் பல வழிகளை கூறுகிறது.

ஹத, ஞான, கர்ம, பக்தி மற்றும் மந்திர யோகம் எனும் ஐந்து பாதைகளைக் கொண்டு ஆன்ம தரிசனம் அடைய முடியும் என யோக சாஸ்திரம் கூறுகிறது.

யோக சாஸ்திரத்தில் மந்திர யோகம் ஓர் அங்கம் என்பதின் மூலம் மந்திர சாஸ்திரத்தின் உயர்வை உணரலாம்.

அறியாமை கொண்ட மனதுடன் ஆராய்ந்தால் ஓர் எளிய வார்த்தைக்கு என்ன சக்தி இருக்க முடியும் என எண்ணத் தோன்றும்.

உண்மையில் மந்திரத்தின் வார்த்தையைக் காட்டிலும் அதை பயன்படுத்தும் விதம் [ப்ரயோகம்] மற்றும் பயிற்சியே [சாதனா] முக்கியம்.

மந்திர உச்சாடனம் செய்யும் பொழுது நமது உடலில் உள்ள 72,000 நாடிகளில் சலனம் ஏற்படுகிறது.

பிரபஞ்ச ஆற்றலில் சில விளைவுகளை ஏற்படுத்தும் இந்த சலனம் முடிவில் நாம் அடைய வேண்டிய இலக்கை அடைகிறது.

மந்திர ஜெபம் மனதை ஒருமுகப்படுத்துகிறது. மனதில் ஏற்படும் சலனத்தை தெளிவாக்குகிறது.

கலங்கலான நீர் இருக்கும் பாத்திரத்தில் ஒரு நாணயத்தை இடும்பொழுது அனைத்து தூசும் அந்த நாணயம் இருக்கும் இடத்தை அடையும்.

நீர் தெளிவடையும். எப்பொழுதும் சலனம் கொண்ட நீர் போன்ற மனதில் மந்திர ஜெபம் செய்யும் பொழுது எண்ண அலைகள் மந்திரத்துடன் அடங்கி மனம் தெளிவடையும்.

ஞான யோகிகள் மந்திர ஜெபத்தை ஆதரிப்பதில்லை. ஆத்ம விசாரம் செய்வதை விட்டு மந்திர ஜெபம் செய்வதால் என்ன பலன்? என்பது அவர்களின் கருத்து.

மனம் ஒடுங்கியதும், மனதின் மூலத்தைக் காண்பதே மந்திர ஜெபத்தின் நோக்கம்.

ஞான விசாரத்தின் நோக்கமும் இதுவே. அதனால் தான் யோக முறையில் ஜெபயோகம் முக்கியத்துவம் பெறுகிறது.

ஜெபம் என்றால் தொடர்ந்து உச்சரிப்பது என பொருள்படும். ஜெபம் மற்றும் அஜெபம் என இரு தன்மைகளை கொண்டது, மந்திரஜெபம்.

தூய்மையான மனதுடன் மந்திரத்தை உச்சரிப்பது மந்திர ஜெபம் எனப்படும்.

தொடர்ந்து மந்திர ஜெபம் செய்த பின்பு வேறு நடவடிக்கைகள் செய்யும் பொழுது நம்மை அறியாமல் மனம் ஜெபம் செய்து கொண்டிருக்கும்.

இது அஜெபம். அதாவது சமஸ்கிருத சொல்லான அஜெபம் ஜெபிக்காத ஜெபம் என மொழி பெயர்க்கலாம்.

உலகில் உள்ள அனைத்து மதத்திலும் மந்திர ஜெபம் உண்டு என்பது இதன் சிறப்பை பறைசாற்றும்.

எனவே மந்திர ஜெபம் சமயங்கள் கடந்த இறை நிலை காட்டும் கருவி எனலாம்.

## என்ன மந்திரம் ஜெபிக்கலாம்?

வேதத்தில் காணப்படும் அனைத்து வாசகங்களும் மந்திரம் என்றே அழைக்கப் படுகிறது.

அதில் சக்தி வாய்ந்த சில வார்த்தைகள் இணைவு பெற்று காணப்படுவதால் வேதம் உயர்வான மந்திரம் என அழைக்கப்படுகிறது.

இதை தவிர்த்து சில சமஸ்கிருத வாசகங்களுக்கு உள்ள சக்தியை கண்டறிந்த நமது முன்னோர்கள் அவற்றை மந்திரமாக உச்சாடனம் செய்து முக்தி அடைந்தார்கள்.

இது போன்ற சில வார்த்தைகளுக்கு அர்த்தம் கிடையாது. மந்திரத்திற்கு அர்த்தம் தேவையில்லை. மந்திரத்தின் சக்தியே முக்கியமானது. மந்திரம் பல வகையாக கையாளப்படுகிறது.

பீஜமந்திரம், தேவதாமந்திரம், பாராயணம் என இவற்றை எளிமையாக வகைபடுத்தலாம். பீஜ மந்திரம் என்பது ஓர் வார்த்தை கொண்டது.

முன்பு சொன்னது போல பீஜ மந்திரத்திற்கு அர்த்தம் தேவையில்லை. “பீஜ” என்றால் விதை எனப்படும். ஓர் சிறு வித்தாக ஒலிக்கும்.

பீஜ மந்திரம் ஒரு மிகப்பெரிய மரம் போன்று வளர்ந்து ஆன்மீக புரட்சியை ஏற்படுத்தும். “ரீம்”




www.aanmeegamalar.com

எனும் பீஜ மந்திரத்தை உச்சரித்த வண்ணம் பறந்து, தேன் சேகரிப்பதால்தான், தேனியின் எச்சில் கூட புனிதமாக கருதப்படுகிறது.

தேவதா மந்திரம் என்பது குறிப்பிட்ட கடவுளை உருவகப்படுத்தும் மந்திரம். இது சில வரி கொண்டதாக இருக்கும்.

காயத்ரி மந்திரம் மற்றும் மஹா மந்திரங்கள் இதில் அடங்கும்.

பாராயண மந்திரம் என்பது பல வரிகள் கொண்ட நீண்ட சொற்றொடர்கள் கொண்டது.

விஷ்ணு சகஸ்ர நாமம், அஷ்டோ த்ர நாமாவளி, ருத்ரஜெபம் என இதற்கு உதாரணம் கூறலாம்.

மந்திரத்தை நாமே தேர்ந்தெடுத்து ஜெபம் செய்யலாம் என பலர் கூறுகிறார்கள்.

ஆனால் சிறந்த குருவின் மூலம் மந்திர தீட்சை பெற்று ஜெபம் செய்வதெ நன்று. இதற்கு பல காரணம் உண்டு.

மந்திரம் உச்சரிக்கும் முறை, அதை உச்சாடனம் செய்யுமிடம், உச்சாடனம் செய்பவரின் தன்மை அறிந்து குரு, தீட்சை அளிப்பதால் மந்திர தீட்சை குருவின் மூலம் பெறுவது சிறந்தது எனக் கூறலாம்.

## மந்திரத்தை தவறாக உச்சரிக்க முடியுமா?

என சந்தேகம் வரலாம்.

இதற்கு கும்பகர்ணனின் கதையை உதாரணமாக கூறலாம்.

தனது தவ வலிமையால் பிரம்மனிடம் இறப்பற்ற நிலையை கேட்க கடுமையான தவ இருந்தான், கும்பகர்ணன். இராவணனின் சகோதரன் இந்த வரத்தைப் பெற்றால் அனைத்து உலகத்திலும் துன்பத்தை விளைவிப்பான் என தேவர்கள் அச்சம் கொண்டனர்.

பிரம்மன் கும்பகர்ணன் முன் தோன்றி “உனக்கு என்ன வரம் வேண்டும் ?” என கேட்டவுடன் “நித்ய தேவத்துவம்” என்று கேட்பதற்கு பதிலாக “நித்ர தேவத்துவம்” என தவறுதலாக கூறினான்.

இது போன்று தவறுதலாக உச்சரித்ததால் இறவா வரம் பெறுவதற்கு பதிலாக தூங்கும் வரத்தைப் பெற்றான்.



சில சமஸ்கிருத மந்திரங்கள் சரியாக உச்சாடனம் செய்யவில்லை என்றால் பலன் அளிக்காது. குருதீட்சை அளிக்கும் பொழுது இதை சரியாகப் பயன்படுத்த துணைபுரிவார்.

மேலும் ஒருவரின் தன்மையைப் பொறுத்தும் மந்திரம் வேறுபடும். இதற்கு அதிகாரத்துவம் என்பார்கள். குரு ஒருவனுக்கு இந்த மந்திரம் முக்தி அளிக்குமா என பார்த்து, இதற்கு சரியான அதிகாரியா என பார்த்து தீட்சை அளிப்பார். மந்திர தீட்சையை நல்ல ஒரு குருவிடமிருந்து பெற்று உச்ச ரிப்பது சாலச் சிறந்தது.





# மனதை கட்டுப்படுத்தும் கோவில் மணி ஓசை



www.aanmeegamalar.com

கோவிலுக்கு செல்லும் அனைவரும் ஏன்? எதற்கு? என தெரியாமல் பின்பற்றும் விஷயங்களில் ஒன்று கோவில் மணி அடிப்பது.

கோவிலில் மணி அடித்துவிட்டு வணங்கினால் கடவுள் காது கொடுத்து கேட்பார் என நினைத்துக் கொண்டிருக்கின்றனர் இது முற்றிலும் தவறு.

கோவிலில் அடிக்கும் மணி ஓசைக்கும், மனிதர்களின் மூளைக்கும் இடையே தொடர்பு உள்ளது என சாஸ்திரத்தில் நமது முன்னோர்கள் கூறியிருக்கின்றனர்.

## கோவிலுக்கு செல்லும் அனைவரும் மணி அடிப்பது ஏன்

பூஜை செய்யும் போது பயன்படுத்தப்படும் ஒரு பொருளாக உள்ள மணி ஓசையின் பின் ஒரு அறிவியல் நுண்ணறிவும் இருக்கிறது.

ஆகம சாஸ்திரங்களின் படி, கோவில் மணியில் இருந்து வெளிப்படும் ஓசை எதிர்மறை சக்திகளை விரட்டி, மனதிற்கும், உடலுக்கும் நேர்மறை சக்தியை அதிகரிக்க செய்கிறது.

கோவில் மணியின் ஓசை மனிதனின் மூளை செயல்திறனை மேலோங்க செய்கிறது என்று அறிவியலில் ஒரு பின்னணி இருக்கிறது.

இதனால்தான் கோவில் மணியின் ஓசை தனித்துவமாக கேட்கிறது.

கோவில் மணியில் இருந்து வெளிவரும் ஒலியில் ஒரு தனித்துவம் இருக்கும். அதற்கு கோவில் மணிகளில் உள்ள கேட்மியம், துத்தநாகம், நிக்கல், குரோமியம் மற்றும் மாங்கனீசு போன்ற உலோகங்கள்தான் காரணமாகும்.

கோவில் மணியில் இருந்து வெளிவரும் ஒலியானது, மூளையின் வலது மற்றும் இடது பக்கங்களை ஒரு சமநிலைக்கு கொண்டு வர உதவுகின்றது.

கோவில் மணியில் இருந்து வெளிப்படும் சத்தம் உடலில் நேர்மறை ஆற்றல் மற்றும் மூளையில் செயல்திறனை அதிகரிக்கச் செய்து, விழிப்புணர்வை மேம்படுத்தி, மனதிற்கு நிறைவான அமைதி மற்றும் நிம்மதியை அளிக்கிறது.

மனம் கட்டுப்படும்போது இறைவனை வணங்கி செய்யும் பிரார்த்தனைகள் நிறைவேறும் என்பதால் கோவில்களில் மணியோசையை நம்முன்னோர் வகுத்து வைத்துள்ளனர்.

# நாகலிங்க மலரின் மகிமை



சிவலிங்கத்தை ஒரு கோயிலில் பிரதிஷ்டை செய்யவேண்டும் என்றால், லிங்கத்திற்கு மேல் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி கட்டவேண்டும். அந்த பாத்திரத்திலிருந்து சொட்டு சொட்டாக தண்ணீர் விழும். சோழமன்னர் ஒருமுறை ஒரு சிவாலயத்தை கட்டினார்; அப்போது அவருக்கு ஒரு அச்சம்தோன்றியது. நம் காலத்திற்குப் பிறகு தண்ணீர் ஊற்றுவார்களோ இல்லையோ என்ற அச்சம்தான் அது. உடனே ஒரு யோசனைத் தோன்றியது, சந்திரகாந்த கற்கலால் கருவரையின் மேற்கூறையை அமைத்து மையத்தில் ஒரு கமலத்தை அமைத்தார். என்ன "அதிசயம்" 24 வினாடிக்கு ஒரு முறை காற்றின் ஈரத்தை சந்திர காந்தக்கல் உறிஞ்சி சிவலிங்கத்தில் தண்ணீராகச் சொட்டியது. கோயில் இருக்கும் ஊர் திட்டை

அதுபோல் இந்த நாகலிங்க மலரின் மேற்கூறையில், சின்னச் சின்ன ஆட்டணா இருக்கும் அந்தத் தும்பித் தாரையில் இருந்து 24 வினாடிக்கு ஒருமுறை ஒரு பனித்துளி அளவு தண்ணீர் லிங்கத்தில் விழும் அதிசயம் நடைபெறும்.



ஓம் நமச்சிவாய நமஹ என்று 10018 முறை ஜபித்தப் பின்னரே, நாகலிங்கப் பூவைத் தொடும் தகுதி நமக்கு வருகின்றது.

அதே போல, நாகலிங்கப் பூவை ஈசனுக்கு சாத்தவேண்டும் என்று விரும்பினால், 21 சாதுக்களுக்கு அன்னதானம் செய்யவேண்டும்; அதன் பிறகு தான் நாகலிங்கப் பூவை ஈசனுக்கு சாத்த வேண்டும்; இப்படி முறைப்படி செய்தால் மட்டுமே நாகலிங்கப் பூவை ஈசனுக்கு அணிவித்த புண்ணியம் நமக்குக் கிட்டும்.

நாகலிங்கப் பூவின் மேல் பகுதியில் கோடி கன்னிகா தான சக்தியைக் கொண்டிருக்கின்றது;

நாகலிங்கப்பூவின் நடுப்பகுதி 10,000 கோவில்களின் கோபுர சக்தியைச் சேர்ந்தது.

நாகலிங்கப்பூவின் அடிப்பகுதி கோவில் குளம் வெட்டிய சக்தியைக் கொண்டிருக்கிறது.

நாகலிங்கப்பூவின் நடுவில் சிறியதாக ஒரு சிவலிங்கம் இருக்கும், இதற்கு ஆத்மலிங்கம் என்று பெயர், இத்தனை சிறப்புடைய நாகலிங்கப் பூவை மேலே கூறிய விதத்தில் பயன்படுத்தினால் மட்டுமே நமக்குப் முழுமையான புண்ணியம் கிட்டும் என புராண நூல்கள் கூறுகிறது.

நாகலிங்க மரம் மருத்துவகுணமுடையது. இந்த மரத்தின் பாகங்கள் ‘அண்ட்டிப யோட்டிக்’ ‘அண்ட்டிசெப்டிக்’, ‘அண்ட்டிஃபங்கல்’, ‘அனல்ஜெசிக்’ (antibiotic, antiseptic, antifungal, analgesic) நிறைந்தவை. சளி, வயிற்று வலி போன்ற உபாதைகளுக்கு மருந்தாக அமைகின்றது.

இம்மரத்தின் இலைகளிலிருந்து கிடைக்கும் சாறு, தோல் நோய்களை குணப்படுத்தும். பழங்குடி யினர் இந்த மரத்தின் பாகங்களைக் கொண்டு மலேரியா போன்ற கொடிய நோய்களைக் குணப்படுத்தினர் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். நாகலிங்க பழத்தின் உட்புறம் காயங்களை ஆற்றும். அதேபோல், இளம் இலை கள் பல் வலியை குணப்படுத்தும்.

அண்மையில் நடந்த ஆராய்ச்சியின் மூலம், இதன் இலைகளில் ’அண்ட்டிமைக்ரொபியல்’ செயல்பாடுகள் மிகுதியாக இருப்பதைக் கண்டு பிடித்தனர். இதனால், தோல்சார்ந்த வியாதிகளுக்கு சிறந்த மருந்தாக இது செயல்படுகின்றது.

நம்முடைய முன்னோர்கள், தங்களின் ஆன்மீக ஆற்றலால் செடிக் கொடிகளோடு தொடர்புக் கொள்ளும் திறன் பெற்றிருந்தனர். இதனால் இவர்கள் எவ்வகையான நோய்க்கு எவ்வகையான மூலிகை உகந்தது என்று நன்கு அறிந்து வைத்திருந்தனர். மரம் செடிகளுக்கு ஆன்மா உள்ளது; அவையும் ஒன்றோடொன்று தொடர்பு கொள்கின்றன. எனினும், சாதாரண மனிதர்களுக்கு அவற்றைப் புரிந்து கொள்ளும் அளவுக்குத் திறன் இல்லை.

## நாகலிங்கமரம் புஷ்பம் மகிமை

1. "நாகம் குடை பிடிக்க உள்ளே லிங்கம்" இருக்கும் அதியற்புத வடிவில் நாகலிங்கப் புஷ்பம் பூக்கும். பூவுலகின் மகத்தான. நாம் வாழும் காலத்திலேயே நாகலிங்க மரம் இன்றும் தென்படுவது, நாம் பெற்ற புன்னியப் பேறே. தினசரி நாகலிங்க மர தரிசனமே நம் உள்ளுள் காலசக்தியையும், கால உணர்வையும் இயங்க வைப்பதாகும்.
2. நாகலிங்க புஷ்பத்தை ஆலயபூஜைக்கு அளித்தல் மிகப்பெரிய புண்ணிய காரியம் ஆகும்.
3. பல பிரதோஷ வழிபாட்டுப் பலன்களை ஒருங்கே தர வல்லதே இறைவனுக்கு நாக லிங்க பூவால் ஆற்றும் பூசனை.
4. நாகலிங்கப் பூவை வைத்து பூஜிப்பதின் முழுபலன்களையும் அடைய, பூஜிக்கப்படும் ஒவ்வொரு பூவிற்கும் ஒருவருக்கேனும் அன்னதானம் அளிக்க வேண்டும்.
5. நாகலிங்க மரம் இயற்கையான யோக அக்னியைப் பூண்டது, நாகலிங்கப் பூவை மரத்தில் இருந்து பறிக்கும்போது கைக்கு இதமான, உஷ்ணமாய் இருப்பதை உணர்ந்திடலாம்.
6. ஒவ்வொரு நாகலிங்கப் பூவும் உள்சூட்டுடன் இருக்கும் இதுவே யோகபுஷ்ப தவச்சூடு ஆகும். இதன் ஸ்பரிசம் மனித மூளைக்கு மிகவும் நல்லது
7. ஒவ்வொரு நாகலிங்க பூவும் சூரிய, சந்திர கிரணங்களின் யோக சக்தியை கொண்டு மட்டுமே மலர்கின்றது.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள், மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ் புக் ஒர்க்,
அட்டைப்பட வடிவமைப்பு, நாளிதழ்கள்,
போன்றவை தரமாகவும் குறைந்த
செலவில் செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: 08825844033

Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.N.Raja, Cell: 08825844033.
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்.காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## இணையதளம் வாயிலாக மாதம் இரண்டுமுறை வெளிவரும்







மேலும் விபரங்களுக்கு
போன்: 08825844033

# ஆன்மிகமலர்
## மெயில் புக்

அனைத்து இதழ்களையும்
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்து பயன் பெறலாம்.



GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.

ஆன்மிகமலர்.காம்

உங்கள் நலம் விரும்பிகளுக்கு ஷேர் செய்து அவர்கள் பயன்பெற உதவுங்கள்